பக்கங்கள்: பதினான்கு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 26 செவ்வாய்க்கிழமை (09~03~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:104



புலிகளின் தலைமைக்கு எதிராக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு பொறுப்பாக இருந்த கேணல் கருணா எழுப்பிய பிரச்சினை தொடர்பாக மட்டக்களப்பு, திருகோணமலை பேராயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான குழுவினர் நேற்று கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

### ஊர்வலங்கள், ஹர்த்தால்கள், புலம்பெயர்வுகள்

# கிழக்கில் மக்கள் மத்தியில் பதற்றம்

# ஆயர் தலைமையில் குழு வன்னி பயணம்

## தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மட்டக்களப்பில் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு,மார்ச்9

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைக்கு எதிராக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்குப் பொறுப்பாகவிருந்த விசேட தளபதி கேணல் கருணா பிரச்சினை எழுப்பியதையடுத்து கிழக்கின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. நிலைமை மோசமடைந்து வருகிறது. பிரச்சினையைத் தீர்த்து இந்த மாவட்டங்களில் உள்ள மக்களின் அச்சத்தை நீக்கி இயல்புநிலை ஏற்படுத்துவதற்காக மட்டக்களப்பு - திருகோணமலை பேராயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று புலிகள் இயக்கத்தலைமையைச் சந்தித்துப் பேச வன்னிக்குச் சென்றிருக்கிறது.**

சமயத்தலைவர்கள், சமூகப்பிரமுகர்கள், புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் கூடிப்பேசிச் செய்த முடிவை அடுத்தே பேராயர் குழு வன்னி சென்றிருக்கிறது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பிரதேசவாதம் முன்னிலைபடுத்தப்பட்டதையடுத்து முதலில் வன்னித்தலைமைக்கு எதிராக ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

நேற்று ஹர்த்தால் நடத்தப்பட்டது. அதனால் இரண்டுமாவட்டங்களிலும் இயல்புநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

வடபகுதியைச் சேர்ந்தவர்கள் எழுபத்திரண்டு மணிநேரத்தில் மட்டக்களப்பைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றை அடுத்து அச்சத்தால் பலர் புலம்பெயரத்தொடங்கியுள்ளனர். இவர்களில் டாக்டர்கள், வர்த்தகர்கள், புத்திஜீவிகள் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிலைய மாணவர்களும் வெளியேறிவருகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**அம்பாறை மாவட்டத்தில்**

அம்பாறை மாவட்டம் முழுவதிலும் நேற்றையதினம் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. கல்முனை - மட்டு. நகர் வாகனப் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. ஹர்த்தால் என்ற செய்தி பரவியிருந்தது. பொது மக்கள் நடமாடுவதைத் தவிர்த்துக் கொண்டனர். என்ன நடக்கிறது? அடுத்து என்ன நடக்கப்போகிறது? இவற்றையறியாதவர்களாகவும், கதைக்கமுடி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆயர் குழுவுடனான பேச்சு: தமிழ்ச்செல்வன் விளக்கம்

### உண்மைகள் தெளிவுபடுத்தப்பட்டன என்கிறார்

மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான குழுவினர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் மட்டு - அம்பாறை மாவட்டத்தின் புதிய தளபதி ரமேஸ், கரிகாலன் மற்றும் கிழக்குப்பிராந்திய தளபதிகளைச் சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்பு தொடர்பாக லண்டன் பி.பி.சியின் தமிழோசைக்கு தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்திலிருந்து ஆயா தலைமையில் வந்த குழுவினர் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்பாக எம்முடன் பேசினார்கள்.

அங்கிருந்து வந்த எமது தளபதிகள் எமது தலைமைப்பீடத்துடன் பேசிய விடயங்கள் மட்டக்களப்புக்கு சென்றடையவில்லை. நாம் தெரிவித்த விடயங்கள் அங்குள்ள மக்களுக்கோ முக்கிய பிரமுகர்களுக்கோ சரியாகப் போய்ச் சேரவில்லை என்பதை நாம் அறிய முடிந்தது.

கருணாவினுடைய அண்மைக்கால செயற்பாடுகள் அவர் மீதானகுற்றச்சாட்டுகள் அந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தலைமைப்பீடம் விசாரணைக்கு முற்படுகையில் கருணா எடுத்த முடிவுகள் தலைமைப்பீடத்தின் அறிவுறுத்தல்கள், கட்டுப்பாடுகளை மீறி செயற்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை சம்பந்தமாக அவர்களுக்கு விரிவாகவும், விளக்கமாகவும் எமது தளபதிகள் எடுத்துக்கூறினார்கள். அதன் பிறகு தற்பொழுது தான் அவர்கள் சகலவற்றையும் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். தளபதிகளும் அவர்களோடு வந்த ஏனையோரும் கண்ணீரோடும், கவலை

(14ஆம் பக்கம் பார்க்க)

### எவரையும் வெளியேறுமாறு கருணா குழு பணிக்கவில்லையாம்!

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து எவரையும் வெளியேறுமாறு கருணா குழு பணிக்கவில்லை என்று அந்தக் குழுவின் தொடர்பாளர் வரதன் தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் ஏனைய மாவட்டத்தவர்களைக் குறிப்பாக யாழ். மாவட்டத்தவர்களை வெளியேறுமாறு விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டக் குழுவினர் பணித்ததாக பல்கலைக்கழக மற்றும் வர்த்தக சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே 120 பல்கலைக்கழக மாணவர்கள் வெளியேறியுள்ள நிலையில் நேற்றுப் பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் வெளியேறி வருகின்றனர்.

இதுசம்பந்தமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கருணா குழுவின் தொடர்பாளர் வரதன் தாம் அத்தகைய பணிப்புரைகள் எதனையும் விடவில்லை என்று தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் (14ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் இயக்கப் பிரச்சினையால்

## படைகள் உஷார் நிலையில் இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு,மார்ச்9

புலிகள் இயக்கப் பிரச்சினை காரணமாக கிழக்கில் ஏற்படும் எந்த நிலையையும் சமாளிப்பதற்காக முப்படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார். தேவைப்படின் மேலதிகப் படையினரை அங்கு அனுப்பி வைக்கவும் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறப்போவதில்லை என்று புலிகளின் முன்னாள் கிழக்குத் தளபதி கருணா தெரிவித்துள்ளதால் மீண்டும் யுத்தம் மூளாது என்று நம்பலாம். இருந்தபோதிலும் இரு தரப்பினரும் மோதிக்கொண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி விட்டனர் என்று ஒருதரப்பினர் மறு தரப்பினர் மீது பழிசுமத்தக் கூடிய நிலை இருக்கின்றது. இதன் காரணமாகவே படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (க)

## ஆதரவாளரை விடுவிக்கக் கோரி ரவிராஜ் நேற்று திடீர் வீதிமறியல்!

யாழ்ப்பாணம்,மார்ச்9

பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்ட கூட்டமைப்பு ஆதரவாளரை விடுவிக்கக்கோரி, தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் ந.ரவிராஜ் சாவகச்சேரியில் நேற்று 'திடீர்' வீதிமறியல் போராட்டம் ஒன்றை நடத்தினார்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் சங்கத்தானைக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதிப்பகுதியில் பிற்பகல் 4 மணி முதல் சுமார் ஒருமணிநேரம் அவர் மறியல் போராட்டத்தை நடத்தினார்.

ஒலிபெருக்கிச் சாதனம் பொருத்தப்பட்ட ஓட்டோவில் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவாகச் சிலர் நேற்று சாவகச்சேரிப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களது ஓட்டோவும், ஈ.பி.டி.பி அமைப்பினரின் பிரசார வாகனமும்,

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி

# மட்டக்களப்பில் நேற்று மகளிர் எழுச்சிப் பேரணி

கல்முனை,மார்ச்.9

நேற்று மட்டக்களப்பில் மாபெரும் மகளிர் எழுச்சிப் பேரணி ஒன்று நடைபெற்றது. இந்தப்பேரணியில் அம்பாறை, கல்முனை, திருக்கோவில் முதலான பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையில் பெண்கள் கலந்துகொண்டனர்.

பெரும்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினரைக் கொண்ட இந்தப்பேரணி காலை பத்து மணிக்கு அம்பாறையில் இருந்து புறப்பட்டு மாலை 4 மணிக்கே மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தை வந்தடைந்தது.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட விசேட தளபதிப் பதவியிலிருந்தும், இயக்கத்திலிருந்தும் நீக்கப்பட்ட கேணல் கருணாவுக்கு ஆதரவாகக் கோஷங்களை எழுப்பினர்.

ஊர்வலத்தின் இறுதியில் மட்டு. இந்துக்கல்லூரி மைதானத்தில் மகளிர் எழுச்சிக்கூட்டம் நடைபெற்றது.

## மட்டு நகர் எங்கும் பொலீஸ் பாதுகாப்பு

காத்தான்குடி,மார்ச்9

மட்டக்களப்பு நகரம், மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலை உட்பட முக்கிய இடங்களில் எல்லாம ஆயுதம் தாங்கிய பொலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். சைக்கிள்களில் விசேட நடவடிக்கைப் படையினர் ரோந்துப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். (க)

## விஞ்ஞானக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்ப்பாணம் விஞ்ஞானச்சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகள் பங்கேற்கும் விஞ்ஞானக் கண்காட்சி எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பங்குபற்றவுள்ள பாடசாலைகள் அனைத்தும் தமது பொருள்களை நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் காட்சிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10-6)

## கல்வியியற் கல்லூரி கட்டுமாணப் பணி துரிதம்

கோப்பாய்,மார்ச்9

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய கட்டடத்தொகுதியின் மேல்தளக்கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அத்துடன் கல்லூரியின் நீர் வடிகாலமைப்புப் பணிகளும் நவீன முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-10-72)

# மருத்துவக் கண்காட்சி மேலும் ஒருநாள் நீடிப்பு

பலரது வேண்டுகோளை அடுத்து மருத்துவ பீடம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் ஏற்பாட்டில் மருத்துவ பீடத்தில் நடைபெற்று வரும் கண்காட்சி நாளை புதன்கிழமை வரை நீடிககப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி ஆரம்பமான இக்கண்காட்சி இன்றுடன் முடிவடையவிருந்தது. எனினும், மக்களினதும், பாடசாலை மாணவர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க இக்கண்காட்சியை மேலும் ஒரு தினத்துக்கு நீடித்துள்ளாக மருத்துவ மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

மருத்துவக் கண்காட்சியைக் காண நேற்றுப் பெரும் எண்ணிக்கையான பாடசாலை மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் திரண்டிருந்தனர். இவர்கள் மருத்துவக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு முண்டியடித்துக்கொண்டிருந்தனர். இவர்களைக் கட்டுப்படுத்த மருத்துவ மாணவர்கள் பலத்த முயற்சிகளை மேற்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்தும் பெருமளவான மாணவர்கள், மக்கள் வந்திருந்தனர். (ம-8)



கிளிநொச்சி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர். அப்போது அவர்கள் 'உதயன்' பணிமனைக்கும் விஜயம் செய்தனர். அந்தவேளை எடுக்கப்பட்ட படங்கள் இவை.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்.)*

## சிப்பாய் தற்கொலை!

வலி.வடக்கு,மார்ச்9

பலாலி படைமுகாமில் விமானப் படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

மாத்தளையைச் சேர்ந்த கே.வி.வி. சிறிவர்த்தன என்பவரே இவ்வாறு மரணம் அடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் நேரில் சென்று விசாரணை நடத்தினார். சடலத்தைக் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி பிரேத பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இந்த மரணம் தொடர்பான சாட்சியங்கள் நாளை புதன்கிழமை விசாரணை செய்யப்படவுள்ளனர். (ஒ-8-6)

# போராளிகளின் மோட்டார் சைக்கிளை பொலீஸார் தடுத்துவைத்து விடுவிப்பு!

தெல்லிப்பழை,மார்ச்9

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் இருவர் மல்லாகம் சந்தியில் பொலீஸாரால் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. பிரஸ்தாபப் போராளிகள் பயணித்த மோட்டார் சைக்கிளுக்கு உரிய ஆவணங்கள் அவர்களிடம் இருக்கவில்லை என்றும் -

இதனால் பொலீஸார் மோட்டார் சைக்கிளைத் தடுத்து வைத்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே அங்கு இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. பின்னர் வலி.வடக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் அங்கு வந்து பொலீஸாருடன் பேச்சு நடத்தினார். இதனையடுத்து பொலீஸார் சம்பந்தபட்ட மோட்டார் சைக்கிளை விடுவித்தனர். (ஒ-4-150)

## மீள்பரீட்சை குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ். பல்கலைக்கழக கலை, வணிக முகாமைத்துவ பீடங்களின் 98 பி.ஏ.டி, 98சி, 98ஏ பிரிவு மாணவர்களின் மீள்பரீட்சை தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-4)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்9

நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதிபர் திருமதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பழைய மாணவர் இராசா வாமதேவன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-10)

★ ★ ★

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலய தொடக்கநிலைப் பிரிவின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திருவாட்டி சாந்தகுமாரி இராசேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சறோஜினி வேதநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-10)

★ ★ ★

கொடிகாமம் அரசினர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் சோ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கலந்துகொள்வார். (ஒ-117)

## மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்9

யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரைநகர் பிட்டியெல்லையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் பிரதிநிதி சுரேந்திரா விஜயரட்ண கலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# மொழித் தேர்ச்சிக்கான படி வழங்குவதில் விதிமுறை மாற்றம்

தென்மராட்சி,மார்ச்9

ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சையில் இரண்டாம் நிலை மொழியான சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்திபெற்ற அரச ஊழியர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழித்தேர்ச்சிக்கான ஊக்குவிப்புப்படி வழங்க முடியாது என மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். இக்கொடுப்பனவு பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.29/98இற்கு அமைய வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சையின் பாடங்களுக்குரிய பாடத்திட்டமானது மிகவும் விரிவான துறைக்குரிய ஒன்றாகும். அதே சமயம் மேலதிகப் பாடங்களின் பாடத்திட்டமானது. விரிவான துறை ஒன்றை உள்ளடக்கவில்லை.

இரண்டாம் நிலை மொழியை மொழி ஊக்குவிப்புப்படி கொடுப்பதற்காக எந்த விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளமுடியாது என பரீட்சை ஆணையாளரும், தாபனப்பணிப்பாளா நாயகமும் அறிவித்துள்ளனர். இதற்கமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-31-117)

# முகமாலையில் தவறவிடப்பட்ட பயணப் பொதிகள் நீதிமன்றில்!

தென்மராட்சி,மார்ச்9

முகமாலை இராணுவச் சோதனை நிலையத்தில் பயணிகளால் தவறவிடப்பட்டவை என்று கருதப்படும் 26 பயணப்பொதிகளைக் கொடிகாமப் பொலீஸார் நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர்.

இப்பயணப் பொதிகளைத் தவறவிட்டவர்கள் அலுவலக நாள்களில் நீதிமன்றத்தில் ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் செ.விக்னேஸ்வரமூர்த்தி அறிவித்துள்ளார். (ஒ-117)

# ஓய்வூதிய மீளாய்வுப்பணி நடைமுறைகளில் சிக்கல்

கொழும்பு,மார்ச்9

ஓய்வூதிய மீளாய்வு நடைமுறையில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

1996ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுத் தற்போது ஓய்வூதியம் பெற்றுவரும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தை மீளாய்வு செய்யும் நடைமுறை, திறைசேரி இது தொடர்பாக வெளியிட்ட அறிவுறுத்தலொன்றையடுத்து பிற்போடப்படும் நிலை உருவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம முதலாம் திகதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அரச ஊழியர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகளே மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று எக்கநாயக ஓய்வூதிய மீளாய்வுக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், 1996ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீளாய்வு செய்யப்படவேண்டுமெனத் திறைசேரி ஆலோசனை தெரிவித்துள்ளது. இந்த இரு யோசனைகள் காரணமாகவே இக்குழப்ப நிலை உருவாகியுள்ளது.

இவ்விடயத்தில் சம்பந்தப்படும் சகல ஓய்வூதியர்களது கோவைகளும் தனித்தனியாகப் பரிசீலிக்கப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதால் சிக்கல் அதிகரித்துள்ளது என்றும் -

இப்பணியைப் பூர்த்திசெய்ய நீணடகால அவகாசம் தேவைப்படுவதாகவும் -

ஓய்வூதியத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ரி)

## பரிசளிப்பு விழா

யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் நாளை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் து.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்(ஒ-4)

யாழ்.சிறையில் உள்ள

# மனநோயாளியை உறவினரிடம் ஒப்படைக்க நீதிமன்றம் பணிப்பு!

தென்மராட்சி,மார்ச்9

கடந்த 20 மாதங்களாக யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மனநோயாளி ஒருவரை உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நீதிமன்றப் பதிவாளருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி கொடிகாமம் நகர்ப் பகுதியில் அமைதிக்குப் பங்கம் விளைவித்தார் என்று குற்றஞ் சாட்டி கொடிகாமம் பொலீஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட கந்தையா ஜெயராஜ் என்ற மனநோயாளியே நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த மனநோயாளியை அவரது உறவினர்களோ அல்லது நண்பர்களோ இதுவரை சந்திக்க முன்வரவில்லை என்று யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சாவகச்சேரி நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதனையடுத்து இந்த மனநோயாளியை அவரது உறவினரிடம் ஒப்படைக்குமாறு நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவருக்கு கந்தையா சிவராசா என்ற சகோதரர் உள்ளார் என்று தெரியவந்துள்ளது என்றும் - ஆயினும் அந்தச் சகோதரரின் முகவரி தெரியாததால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் - நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள மனநோயாளியை பொறுப்பேற்கக் கூடிய இவரது உறவினர்கள் நீதிமன்று அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் செ.விக்னேஸ்வரமூர்த்தி அறிவித்துள்ளார். (ஒ-31-117)

### வடக்கு - கிழக்கு மாகாணத்தில்

# இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் அலுவலர்களுக்குப் பற்றாக்குறை

வலிகாமம் தெற்கு,மார்ச்9

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக் குறை நிலவுவதாக கல்வி அமைச்சு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 370 கல்விநிர்வாக சேவை உத்தி யோகத்தர்கள் கடமையாற்ற வேண் டிய நிலையில் 124 பேரே தற்போது சேவையில் உள்ளனர் என புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகின்றது.

இதேவேளை-

இலங்கை முழுவதிலும் 9ஆயி ரம் கல்வி நிர்வாக சேவை உத்தி யோகத்தர் மேலதிகமாக சேவையில் உள்ளனர். இலங்கை முழுவதுக்குமாக 2ஆயிரத்து 400நிர்வாக உத்தியோ கத்தர்களே சேவையாற்ற அங்கீக ரிக்கப்பட்ட நிலையில், தற்போது 11 ஆயிரத்து 400 பேர் சேவையில் உள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஒப்பீட்டு ரீதியாக இருக்கும் இந்த இடைவெளியால் கல்விசார் அபி விருத்தி நடவடிக்கைகளுக்கு குந்த கம் ஏற்படுவதாகவும் - சிங்கள மொழி மூல பாடசாலைகளைவிட தமிழ்மொழி மூல பாடசாலைகளின் கல்வித்தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வரு வதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைவதாகவும் கல்வி ஆய்வாளர்க ள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், தமிழ்மொழிமூல கல் விப் பணிப்பாளர்களின் பற்றாக்குறை களினாலும் கல்வித்துறை மேலும் பின்னடைவை எதிர்நோக்குவதா கவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-8-152)

# லயன்ஸ் கழக பிராந்திய மாநாடு மானிப்பாயில் சிறப்பாக நடந்தது

யாழ்ப்பாணம்,மார்ச்9

சாவதேச லயன்ஸ் கழகங்களின் பிராந்தியங்களுக்கிடையிலான மாநாடு நேற்றுமுன்தினம் மானிப்பாய பிரதேசசபை நகர மண்டபத்தில் சிறப் பாக நடைபெற்றது.

லயன்ஸ் கழகத்தின் யாழ். பிராந் திய இணைப்பாளர் லயன் எஸ். எஸ்.தங்கராசா தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக் கினை விருந்தினர்களாகக் கலந்து கொண்ட லயன்ஸ் கழகங்களின் மாவட்ட ஆணையாளர் லயன் றொஹான் பெரேரா தம்பதிகள், மாவட்டப் பணிப்பாளர் லயன் அசோக டி.எல். குணசேகரா தம்பதிகள், லயன்ஸ் கழகங்களின் ஆலோசகர் லயன் சுனில் வந்தபல, முன்னாள் மாவட்ட ஆணையாளர் லயன் எஸ். சிவபாதசுந்தரம் மற்றும் முன்னாள் மாவட்ட ஆணையாளர் லயன் கே. தில்லைநாதன் ஆகியோர் ஏற்றிவைத தனர்.

முன்னதாக விருந்தினர்கள் அனை வரும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து மங்கல வாத் தியங்கள் முழங்க விழாமேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன் னியர்மடம் ஆகிய பாடசாலைகளின் மாணவிகள் வழங்கிய நாட்டிய நட னம் நடைபெற்றது.

லயன்ஸ் கழகத்திற்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி யாழ். பல் கலைக்கழக முன்னாள் துணைவேந் தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரட்ணம் ஆகியோர் லயன் றொஹான் பெரேரா மற்றும் லயன் சீமாட்டி குணசேகர பத்ஹினி ஆகியோரால் பொன்னாடைபோர்த்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட னர்.

மன்னார், வவுனியா, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்களின் இணைப்பாளர்கள், பிராந்திய இணைப்பாளர்கள், மாணவ மாணவிகள் உட்படப் பெருமளவா னோர் கலந்துகொண்டனர்.

(ம-8-5)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1936 - 10 - 04



உதிர்வு 2004 - 02 - 08

**அமரர் சோமசுந்தரம் கந்தசாமி (அப்பையா)**

(இளைப்பாறிய கட்டட மேற்பார்வையாளர்)

பாரினிலே எம்மை அன்பு என்னும் நீரூற்றி
ஆதரவு காட்டி அரவணைத்த அன்புத் தந்தையே!
அறிவுடைய நற்பெட்டகமாய் அவனியிலே வாழ்ந்தவரே!
தென்றலாய் வந்தெமக்குத் தெளிவாய்ப் பதில் சொல்வீர்
தெய்வமே! காலமெல்லாம் உங்கள் நினைவுடனேயே நாம் வாழுகின்றோம்.

*கேணியடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(29428) (22-16-19)

-குடும்பத்தினர்.



## Alliance Francaise of Jaffna

**Creating a centre for learning French and exchange of cultural activities**

**General Assembly**

**will be held in order to appoint a temporary Committee.**

**Date : Friday, 12th March 2004**
**Time : 2 p.m.**
**Venue : Library Auditorium, University of Jaffna.**

***French Films***
**Alliance Francaise of Jaffna**
*No.:83/1, Palaly Road, Kanthermadam, Jaffna.*

★ **Friday 12th March at 7p.m.**
Le Hussard sur le toit / The Horseman on the roof
*By : Jean - Paul Rappeneau*
★ **Saturday, 13th March at 7 p.m.**
Jeanne d'Arc/Joan of Arc
*By : Luc Besson.*

(29429)(34)


# கொடிகாமத்தில் மக்கள் வங்கியின் நடமாடும் சேவை

சாவகச்சேரி மக்கள் வங்கியினர் தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி வடக்கு, பச்சிலைப்பள்ளி, வடம ராட்சி கிழக்கு ஆகிய பிரதேச மக்க ளின் நன்மைகருதி நடமாடும் சேவை கருமபீடம் ஒன்றை விரைவில் கொடி காமத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

கொடிகாமம் எரிபொருள் நிலை யத்திற்கு அருகில் உள்ள கட்டடத் தில் இந்த விசேட கருமபீடம் தின மும் இயங்கவுள்ளது.

மீசாலை வடக்கு, மந்துவில், வரணி, மிருசுவில் , கச்சாய், உசன், விடத்தற்பளை, கொடிகாமம், எழுது மட்டுவாழ் உள்ளடங்கிய தென்ம ராட்சி பிரதேச மக்களும் பளை, வட மராட்சி கிழக்கு பிரதேச மக்களும் இந்த விசேட கருமபீடத்தில் தமது வங்கி நடவடிக்கையில் ஈடுபடலா மென சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.பாலச்சந்திரன் அறி வித்துள்ளார்.

(ம-117)

# திருட்டு மின்சாரம் பெற்றோர் சிக்கினர்

கைதடி,மார்ச்9

கைதடிப் பகுதியில் சுமார் 10 குடும்பங்கள் நீண்ட நாள்களாகத் திருட்டு மின்சாரம் பெற்று வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மின்சார சபைக கும், சாவகச்சேரி பொலீஸாருக்கும் அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு வந்த அவர்கள் பெருமளவு வயர்களைக் கைப்பற்றியதுடன் இரு இளைஞர்களை விசாரணைக்கு வருமாறும் கூறிச் சென்றுள்ளனர்.

(ம-10-75)

## மாத்தறை தொழிற்சங்க உறுப்பினர்கள் வருகை

யாழ்ப்பாணம்,மார்ச்9

மாத்தறை மாவட்டத் தொழிற் சங்க உறுப்பினர்கள் 25 பேர் கொண்ட குழுவொன்று எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். குடாநாட்டுக்கு வருகைதர வுள்ளது.

இக்குழுவினர் யாழ்.குடாநாட்டி லுள்ள தொழிற்சாலைகளைப் பார் வையிடுவதுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான திட்டம் பற்றி யும் சிறு கைத்தொழில் நுண்ணியல் பற்றியும் யாழ்.குடாநாட்டுத் தொழிற் சங்கத்துடன் கலந்துரையாடவுள்ளனர்.

## மூக்குக் கண்ணாடிகள்

தென்மராட்சி,மார்ச்9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தி னர் கடந்தமாதம் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம், மீசாலை விக்னேஸ் வரா வித்தியாலயம் ஆகியவற்றில் நடத்திய கண்பரிசோதனை முகாம் களில் சிபார்சு செய்யப்பட்ட பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை மீசாலை விக்னேஸ்வரா விததியாலயத்தில் மூக்குக்கண்ணா டிகள் வழங்கப்படவுள்ளதாகவும், மூக் குக் கண்ணாடி பெறுவதற்குத் தகுதி யானவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பி யுளளதாகவும் லயன்ஸ் கழகச் செய லாளர் லயன் கா.சற்குணதேவன் தெரி வித்தார்.

(ம-117)

# திரிபோஷாவுக்குப் பதிலாக அரிசி, மீன்ரின், தே.எண்ணெய்

தென்மராட்சி,மார்ச்9

யாழ்.மாவட்டத்தில் போஷாக்குக் குறைந்தவர்களுக்கு வழங்கப்படும் திரிபோஷா மாவுக்குப் பதிலாக இம்முறை அரிசி, தேங்காய்எண் ணெய், மீன்ரின் ஆகியன வழங்கப் படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஏழு சுகா தார வைத்திய அதிகாரி பணிமனை களுக்கு வழங்கவென கடந்த 5ஆம் திகதி ஐந்து லொறிகளில் இப் பொருள்கள் கொண்டுவரப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திரிபோஷா ஏற்றிவரக் கொழும்பு சென்ற லொறிகள் இப்பொருள் களைக் கொண்டு வந்துள்ளதாகவும் இவை யாழ்ப்பாணம், ஊர்காவற் றுறை, மானிப்பாய், பருத்தித்துறை, கோப்பாய், சாவகச்சேரி, தெல்லிப் பழை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு விரை வில் அனுப்பிவைக்கப்படவுள்ள தாகவும தெரிவிக்கப்படுகின்றது.

(ம-8-117)


## உளமார வாழ்த்துகின்றோம்

யாழ்.ஆனைப்பந்தியைச் சேர்ந்தவரான

வர்ணக் கலைவேந்தர்



**திரு.கந்தையா சுந்தரலிங்கம்**

அவர்கள் 04-02-2004இல் "கலாபூஷணம்" விருது பெற்றமையையிட்டு இணுவில் கந்தசுவாமிகோயில் தர்மகர்த்தா சபையினராகிய நாமும் முருகன அடியார்களும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அவரது பணி சிறப்புற்றுத் திகழ கந்தப்பெருமானைப் பணிந்து உளமார வாழ்த்துகின்றோம்.

- தர்மகர்த்தா சபையினர்,
இணுவில் கந்தசுவாமி கோயில்.

(29427) (26-16-19)



## வட கிழக்குத் தொழில்நுட்பம்
## NORTH EAST TECHNOLOGIES (NET)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட PI,PII, PIII,PIV கணனி வகைகளை உத்தரவாதத்துடனும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ளவும் (வியாபாரத்தின் பின்பு சகல கணனிகளுக்கும் தொழில்நுட்ப வசதிகளும் வழங்கப்படும்).

நீங்கள் விரும்பிய வடிவத்தில் கணனிகளைப் பெற்றுக் கொள்ளவும் திருத்த வேலைகளைச் செய்து கொள்ளவும் நாட வேண்டிய ஒரே இடம் :- **NET (PVT) LTD.**

தற்போது பாவனையிலுள்ள சகல விதமான செல்லிடத் தொலைபேசிகளைப் பெற்றுக்கொள்ளவும், சகல விதமான திருத்த வேலைகளைச் செய்து கொள்ளவும், (Unlocking) lock உடைத் தல் வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்:- **NET (PVT) LTD.**

24 மணிநேர குளிரூட்டப்பட்ட வசதியுடன் Internet Browsing செய்யவும் உலகளாவிய ரீதியில் net2phoneஇலும் IDDயிலும் தொடர்புகொள்ளவும், Chatting, Browsing, Video Conference, Net meeting மூலம் உங்கள் நண்பர்களுட னும் உறவினர்களை பரஸ்பரம் பார்த்துக் கொண்டே பேச நாட வேண்டிய ஒரே இடம் NET (PVT) LTD & Navaly south, Manipay கிளையிலும். T.P. : 021-2223706

அதிக நேர செயன்முறையுடன் கூடிய கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
basic course - 1 Month
Computer Hardware Course (Intensive, 5 Days Course)

**NET (PVT) LTD**

34, SADANATHAR ROAD,
NALLUR, JAFFNA.
T.P. No : 021-2223786

(சி-33960) (26-16-19)






## 5 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட **திரு.திருமதி கருணாகரன்-செல்வி** தம்பதிகளின் செல்வப் புதல்வி **செல்சியா** தனது 5ஆவது பிறந்தநாளை இன்று (09-03-2004) லெபனான் சினல் பீலிலுள்ள தனது இல்லத்தில் மிகவும் அமைதியாகக் கொண்டாடுகிறார். செல்சியாக்குட்டியை அன்பு அப்பா,அம்மா, ஆனைக் கோட்டையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சுதா சித்தப்பா குடும்பம், சசிசசித்தப்பா குடும்பம், மயூரா அத்தை குடும்பம், புஸ்பம் பெரியம்மாகுடும்பம், தேவிப்பெரியம்மா குடும்பம்,பெரிய அப்பம்மா, லிங்கா அத்தை குடும்பம், உதயா அத்தை குடும்பம், மகேஸ் அத்தை குடும்பம் (ஜேர்மனி), யோகா அத்தை குடும்பம (ஜேர்மனி),சுசிமச்சாள் குடும்பம் (ஜேர்மனி),குமார் பெரியப்பா குடும்பம் (லண்டன்), உதன் பெரியப்பா குடும்பம் (பகறின்), ரவிபெரியப்பா குடும்பம் (பகறின்), அழகேஸ் அத்தை (பகறின்), வவுனியா அப்பம்மா, ஜெகா அத்தை குடும்பம், சானா அத்தான், சித்திரா மச்சாள், அளவெட்டி அப்பம்மா, அத்தை மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் மழலையை பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

ஆனைக்கோட்டை. **அப்பம்மா-S.பூரணம்**

(29424) (41-14-18)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

11 சிறீ தொடர் இலக்க கொறில்லா 50 ரக கார் SILVER GRAY அத்துடன் ஆங்கில இலக்கத் தொடரை உடைய சுசுக்கி 50 ரக மோட்டார் சைக்கிளும் (தனிப்பாவனை) விற்பனைக்குண்டு. தொடர்பு: 711,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.:021-222 6188. (29404)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35நாளில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும், பிறிமா இன சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகளும் 10.03.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:222 3529, 222 2867. (29386)

## புதிய கலாசார மண்டபம்

தெல்லிப்பழை,மார்ச்9

அளவெட்டியில் பாரிய கலாசார மண்டபமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் தறபோது நடைபெற்றுவருவதாக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பதிலகநாயகம்போல் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அளவெட்டி சுப்ரமணிய சுவாமிகள் ஞாபகார்த்த கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கலாசார விழா நன்றியறிதல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார். வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவின் மத்திய பகுதியாகிய அளவெட்டியில் சுவாமிசுப்பிரமணிய ரிஷி ஞாபகார்த்த அரங்க வளாகத்திலேயே இந்த மண்டபம் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இது வலி. வடக்கு மக்கள் அனைவருக்கும் பொதுவான கலாசார மண்டபமாகத் திகழும் எனவும், அவர் தெரிவித்தார். (ம-150)

## திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

தெல்லிப்பழை,மார்ச்9

வலிகாமம் வலய, உடுவில் கல்விக்கோட்டம் 2004ஆம் ஆண்டிற்காக நடத்திய திருக்குறள் மனனப்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. கடந்தமாதம் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் முதல் 5 இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

முதலாமிடம்: செல்வன் அபூவசிங்கம் தர்சிகரூபன் (இணுவில் மத்திய கல்லூரி), இரண்டாமிடம்: செல்வி கனகரத்தினம் கயவாணி (ஏழாலை புனித இசிதோர் வித்தியாலயம்), மூன்றாமிடம்: செல்வன் அமிர்தலிங்கம் டர்சன் (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), நான்காமிடம்: செல்வி கனகரத்தினம் அபிராமி (ஏழாலை புனித இசிதோர் வித்தியாலயம்), ஐந்தாமிடம்: செல்வி யோகேஸ்வரன் நிதூஷியா (ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை).

வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன. (ம-150)

## குருகுலத்துக்கு புதிய மாணவர்கள் சேர்ப்பு

வலிகாமம் தெற்கு,மார்ச்9

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஆதரவுடன் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தினரால் நடத்தப்பட்டுவரும் வேத சிவாகம குருகுலத்துக்குப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

குருகுலத்தில் கல்வி பயில விரும்பும் பிராமண சிறுவர்களிடம் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள், தினசரி வந்து போகும் மாணவர்கள், வாரஇறுதியில் வகுப்புகளில பயிலும் மாணவர்கள் என மூன்று பிரிவுகளாகக் கல்விபயில அனுமதிக்கப்படுவார்கள்.

வைதீக வகுப்புக்கள் மயிலணி சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்த குருக்களால நடத்தப்படவுள்ளன. சிவாச்சாரியார்களுக்கான வைதீக வகுப்புகள் மற்றும் ஆங்கில மொழிமூல கணனி கற்கை நெறிகள் என்பனவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவற்றில் பங்குபற்றிக் கல்விபயில விரும்பும் பிராமண சிறுவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-152)

# வடக்கு - கிழக்கில் இந்த ஆண்டு 87 பாடசாலைகள் புனரமைப்பு

வலி.தெற்கு,மார்ச்9

வடக்கு - கிழக்கு மாகாணப் புனரமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வருடம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 87 பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இப்பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகளுக்கென 9 கோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 19 பாடசாலைகளும், அம்பாறை மாவட்டத்தில் 23 பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 பாடசாலைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 13 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பாடசாலைகளும், மன்னார், வவுனியா மாவட்டங்களில் தலா 4 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 பாடசாலைகளும் அபிவிருத்தி செய்வதற்கென இந்த நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் புதிய வகுப்பறைக் கட்டடங்களைக் கட்டுவதற்கும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கும் பாடசாலைக் கட்டடங்களை பூர்த்திசெய்து கொள்வதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைகள் பிரதம பொறியியலாளர் எஸ்.கே. விநாயகரட்ணம் தெரிவித்துள்ளார். (ம-152)


இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை

ஸ்ரீ வீரகாளி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்



**மணிசாமி** அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும்.

திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில் முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

N.A.லொட்ஜ், (ராஜா தியேட்டர் அருகில்)

றூம் நம்பர் 10, புதிய ஆனந்தா நகைமாடம் மேல்மாடி, நியூலலிதா ஜுவல்லறி, இல.185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை)

(29425)(24-14-21)



இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(14-16-21) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-33905)


# அனுமதியின்றி மதுபானம் விற்றவர் கைது!

அனுமதிப் பத்திரம் பெறாமல் மதுபானம் விற்பனை செய்த மதுபானக் கடை உரிமையாளர் கோப்பாய் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதியில் பஸ் டிப்போவுக்கு அண்மையில் கடந்த வெள்ளி மாலை 5மணியளவில் இடம்பெற்றது.

மேற்படி மதுபானக்கடைக்கு அண்மையில் போக்குவரத்துச்சாலை, பாடசாலை, விளையாட்டு மைதானம் என்பன அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால், பொதுமக்கள் அப்பகுதியில் மதுபானக் கடை அமைவதை எதிர்த்து வருகின்றனர். (ம-49)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபரும், பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமாகிய
**நடராஜா சபாரெட்ணசிங்கி**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி நடராசா நாகரேத்தினம்மா**
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கின்ற அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

வட்டு.மத்திய கல்லூரி அபிவிருத்திச் சங்கமும்
பழைய மாணவர் சங்கமும்.

(C/33959)(34-21-14)

## மரண அறிவித்தல்

### அமரர் சோமசுந்தரம் வைத்திலிங்கம்

(லிங்கம் கூல்பார், மன்னார்)

யாழ்ப்பாணம், இணுவிலைப் பிறப்பிடமாகவும் மன்னார் மூர்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மன்.சித்திவிநாயகர் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளராகிய வைத்திலிங்கம் 05.03.2004 இல் சிவபதம் அடைந்தார்.

அன்னார் புஸ்பலீலாவின் அன்புமிகு கணவரும் சண்முகப்பிரியா (மன்.புனித சவேரியார் பெணகள் தேசிய கல்லூரி), கஜேந்திரன், ஜீவேந்திரன் (மன்.புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சோமசுந்தரம், திருமதி இரத்தினம் அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலு (முன்னாள் கலாவதி கபே உரிமையாளர், மன்னார்), சுப்பிரமணியம், காலஞ்சென்ற திரு. திருமதி கனகரத்தினம் - அன்னலட்சுமி தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரி, பரமேஸ்வரன், கணேஸ்வரன் (பிரான்ஸ்), ஞானேஸ்வரி, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவராசா, தவகிருஸ்ணா (மன்னார்), சச்சிதானந்தன், திருச்செந்தூர்த் தேவன், ஸ்ரீவரதன், இலட்சுமிதேவி, மனோரதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இல்லத்தில் (06.03.2004) அன்று இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்: ச.சிவசங்கர் (மருமகன்), இணுவில் தெற்கு. - குடும்பத்தினர்.

(29426)(34-21-14)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் : 12.02.1982 மறைவு : 25.01.2004

## செல்வி சிங்கராசா சசிரேகா





காலமெல்லாம் எம்மோடு
கலகலப்பாய் இருப்பாயென்று
கண்மணியே நாமெல்லாம் காத்திருந்தோம்
கலகலப்பும் சிரிப்பொலியும்
கனவாகிப் போனதம்மா
கண்ணீரில் தினம்தோறும் வாடுகின்றோம்
பூவான உன்மேனி
புனலுக்கு இரையாக
புழுவாக எம்மேனி துடித்ததம்மா - இன்றும்
புலம்புகிறோம் புலம்புகிறோம் பூவே உன் திருமேனி
காண்போமே நாமென்று கண்விழித்துக் காத்திருப்போம்.

இன்று (09~03~2004) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

சந்நிதி வீதி,
அச்சுவேலி.

(29378) (41-14-18) -குடும்பத்தினர்.

## உதயன்

# வரலாற்றுத் திருப்பத்தில் இன்று தமிழ் இனம்

"தமிழ் மக்களாகிய நாம் மீண்டும் ஒரு தடவை ஒன்றிணைந்து சரித்திரம் படைக்கவும், சமாதானத் துக்கான எமது தெரிவினைத் தெளிவாக வெளிப்படுத் தவும் இத்தேர்தலைப் பயன்படுத்துவோம்."

- இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

இது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கை யில் முக்கியமாக இரண்டு விடயங்கள் அடங்கியுள்ளன.

தமிழ் மக்கள் அனைவரும் போரை அல்ல, அமை தியையும் சமாதானத்தையுமே விரும்புகிறார்கள் என்பதை முழு உலகிற்கும் வெளிக்காட்டுவதற்காகத் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் இந்தத் தடைவையும் மீண்டும் ஒரு சரித்திரம் படைக்க முடி யும்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்களும் தங்கு தடையின்றி - பிறரின் அழுத்தம் ஏதுமின்றி - தங்கள் சுய இச்சைப்படி - வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

- இவையே யாழ். ஆயர் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய அம்சங்கள்.

ஈழ விடுதலைப் போராட்டம் இன்று முக்கியமான தோர் வரலாற்றுத் திருப்பு முனையில் - சரித்திரத்தின் சந்தியில் - நிற்கின்றது.

இந்தச் சமயத்தில், தமிழ் மக்களின் ஐக்கியமே முக்கியமானது என்பது சகல தமிழர் தரப்புகளி னாலும் முன்னிலைப்படுத்தப்பட்டு உணர்த்தப்பட்டுள் ளது.

சாதி, மத, பிரதேச வாதங்களுக்கு உட்பட்டு தமிழி னத்தைப் பிளவுபடுத்துவது இனத்தின் இருபது ஆண்டு விடுதலைப் போரையும் இனத்தின் மீட்சியையும் மண் ணாக்கிவிடும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆனால்,

இன்று தமிழர் தாயத்தின் நிலையோ, "வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழியை உடைத்த" கதையாகி நிற்பதுதான் வேதனையிலும் வேதனை.

ஐந்து தசாப்தங்களாக அஹிம்சை வழியிலும் ஆயுத ரீதியிலும் இரத்தத்தையும் சதையையும், உயிர்களையும் உடைமைகளையும் வகை தொகை யின்றி ஈகம் செய்து, ஈழத்தமிழர் நடத்தி வந்த போராட் டத்தின் அடி நாதத்தையே - மூல ஆத்மாவையே - தகர்க்கும் முயற்சி முடுக்கி விடப்பட்டிருப்பது தான் ஈழத் தமிழர்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த் தியிருக்கிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு மூல வேராக இருப்பது தமிழர் தாயகம் என்ற அடிப்படை கோட்பாடுகள். அதை பாதுகாப்பதற்குத்தான் இத் துணை இழப்புக்களையும், துயரங்களையும் பாடு களையும் தமிழ் இனம் அஞ்சாமல், சினக்காமல் சுமந்தது; சுமந்து நிற்கிறது.

தமிழர் தாயகத்தை வடக்கு - கிழக்கு என்று கூறுபோட்டு, நம்மைப் பலவீனப்படுத்தி, அதன் மூலம தொடர்ந்து அடிமைப்படுத்த சிங்களப் பேரினவாதம் முழுமூச்சில் முயற்சித்து வந்தது; மூர்க்கத்துடன் முயற்சித்து நிற்கிறது.

சிங்களப் பேரினவாதத்துக்கு துணைபோகும் விதத்தில் நமக்குள்ளேயே பிரதேச வாதத்தைத் தூண்டி, குழப்பத்தை ஏற்படுத்தி, நம்மைப் பலவீனப்ப டுத்துவது கோடரிக்காம்பு வேலைக்கு ஒப்பானதா கும். தமிழர்கள் அனைவரும் இதனைத் தயக்கமின்றிப் புரிந்து கொள்ளவேண்டும்.

சில தனிப்பட்ட இலாபங்களுக்கு பிரதேச வாதம் அவ்வப்போது பயன்படலாம். ஆனால், அதுவே நிரந் தரமாகி தமிழர் தாயகம் துண்டுபடுமானால் அதன் பாதிப்பு யாருக்கு அதிகம் என்பதை ஒவ்வொருவ ரும் ஒரு தடவை எண்ணிப்பார்ப்பது முக்கியம்.

பிரிந்து நிற்கும் நம்மை பேரினவாதமும் பிற எதிர ணிகளும் சுலபமாகக் கபளீகரம் செய்து விடும் என்ற யதார்த்தத்தைப் புரியாமல் - இன்றைய உணர்ச்சிப் போக்கில் - கண்மண் தெரியாமல் நடந்து கொள்வது, யாருக்காக நாங்கள் போராடுகிறோம் என்று கூறுகின் றோமோ, அவர்களின் அழிவுக்கே வழி செய்யும் என் பதை சம்பந்தப்பட்டோர் எவராயினும் அவர்கள் உணரவேண்டும்.

யாழ். ஆயர் கூறுவது போல இனத்தின் ஐக் கியத்துக்கு ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம்.

தவறினால் அழிவே நிச்சயம். விபரீதமே விளைவு.

இந்தத் தேர்தலில் ஒன்றுபட்டு வாக்களிப்பதன் மூலம், தமிழர் தாயகத்தின் ஐக்கியம் கேள்விக்கு அப்பாற்பட்டது என்ற உறுதிப்பாட்டைத் தமிழினம் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைப்பது மிகமிக அத்தியாவசியமானது. எமது எதிர்காலச் சந்ததியின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டு - ஒரே அணிநின்று - வாக்களிக்கச் சங்கற்பம் செய்துகொள்வது ஒவ் வொரு ஈழத்தமிழ் மக்களினதும் கடமையாகும்.

# வாக்களிக்க சென்று, விடவில்லை என்றால் அந்தச் செய்தியை உலகுக்குக் கூறுவோம்

### புலிகளின் பிரமுகர் கா.வே.பாலகுமாரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு,மார்ச்9

தெற்கில் உள்ளவர்களைப் பேச வாருங்கள் என்றால் பேச வருகிறார்கள் இல்லை. போர் தொடுத்து முடிக்கலாம் என்றால் அதற்கும் விடுகிறார்களில்லை. வாக்களிக்கச் சென்று அதற்கும விடவில்லை .என்றால் அந்தச் செய்தியை நாம் உலகுக்குக் கூறவேண்டும் - இவ்வாறு தெரி வித்தார் கா.வே.பாலகுமாரன்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு முல் லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட தேர் தல் வேட்பாளர் சதாசிவம் கனகரத்தினம், முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாகசேவை பொறுப்பாளர் இசையமுதன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஏற்றினார்.

கருத்துரைகளை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அருணாசலம் நிகழ்த்தினார். வாக்களிப்பது எவ்வாறு என நிதித்துறையைச் சேர்ந்த ஆதவன், கரைதுரைப்பற்று பிர தேசசபை செயலாளர் கிருஸ்ணபிள்ளை ஆகியோர் வழங்கினர். தற்கால அரசியல்நிலை தொடர்பாகவே விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் க.வே.பாலகுமாரன் இங்கு உரையாற்றினார். இக்கலந்துரையாடலில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

பாலகுமாரன் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள தேர்தலில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டு வெற்றி பெறுவோம். ஜனநாயக ரீதியிலான இந்தப் போராட்டத்தில் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும்

இந்தத் தேர்தலை சொந்தப் பணியாக கருதவேண்டும். உங் கள் உறவுகளின் வீடுகளில் நடைபெறும் விழாக்கள்போல நினைத்துச் செயற்பட வேண்டும். வாக்குப் போட வேண்டாம் என்று சொன்ன நாமே வாக்குச்சீட்டை எவ்வாறு போடவேண் டும் என்று விளம்பரம் ஒட்டிக்கொண்டு வாகனத்தில் திரிகின் றோம்.

இந்த மண்ணில் நிகழ்ந்துள்ள மாற்றத்தை நீங்கள் சரி யாகப் புரிந்துகொள்ளவேண்டும். தவறான சமிக்ஞை எதுவும் தருவதற்கு இந்த மேடையில் நாம் வரவில்லை. தேர்தல் என்பது அதுவும் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் அது ஒரு வழுக்கு மரம். இன்றைக்கு அல்ல என்றைக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் வரப்போவதில்லை.

இன்றைக்குள்ள நிலைமை என்ன? எல்லோரும் நினைக்கி றார்கள் புலிகளும் பழைய பாணிக்கு போய்விட்டார்களோ என்று. இது பெரும்பாலருடைய கருத்தென்றால் என்ன, ஒருவருடைய கருத்தென்றால் என்ன ஒரு தவறான குறியீட்டு வடிவம் வரக்கூடிய அபாயம் இருப்பதை நாம் உணருகிறோம். அதை முற்றாக மாற்றி அமைக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

நாங்கள் இந்தத் தேர்தலை பகுதியாய்ப் பார்க்கிறோம், எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகத் தொகுத்துப் பார்க்கிறோம். எல்லாவற்றையும் என்று கூறும்போது இராணுவரீதியான செயற பாடு, அரசியற் செயற்பாடு, ஜனநாயகச் செயற்பாடு என்ற இந்த மூன்று செயற்பாடுகளையும் தொகுத்து ஒரு உத்தியை வகுத்து செயற்படுகின்றோம்.

அதைத்தான் இங்கு கூறுகின்றார்கள். போரின் மறுகாட்சி, போரின் மறுவடிவம் என்று பல பெயர்கள் சூட்டினார்கள்.

போரை நிறுத்தி இன்னொரு வடிவமான போரை நாம் இங்கு செய்கின்றோம். அந்த எண்ணம் தெளிவாக உங்களுக்கு இருந் தால் போதும்.

இந்த மேடை பழைமையான ஒரு தேர்தல் மேடையல்ல. இதனைத் தெளிவாக எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். வாக்களிப்பு எப்படி என்பது நிச்சயமாக எல்லோருக்கும் தெரியாது. வாக்களிப்பதற்கு எப்படி நாம் செல்வது என்பதும் எமக்குத் தெரியாது. ஆனால், தேர்தல் அன்று பெரிய புரட்சியை உருவாக்க வேண்டும். எங்களுடைய மக்கள் எல்லோரும் சேர்ந்து நின்று வாக்களிக்க முடியாவிட்டால் உலக நாடுகளுக்கு நாம் கூறுவோம் வாக்களிக்கவிடவில்லையென்று - என்றார்.

# கூட்டமைப்பின் பிரசாரப் பணிகள் இன்றுமுதல் தொகுதி ரீதியாக முழுவீச்சில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ ரசுக் கட்சியின் பிரசாரப் பணிகள் இன்றுமுதல் முழுவீச்சில தொகுதி ரீதியாக இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர், வட்டுக்கோட்டை மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளில் பிரசாரங்களை மேற்கொள்வதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை சேனா திராசாவும் - மானிப்பாய், கோப்பாய், காங்கேசன்துறை ஆகிய பகுதிக ளுக்கு எஸ்.சிவமகாராசாவும், பருத்தித்துறை, உடுப்பிட்டி மற்றும் சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கு என்.ரவிராஜ°ம் நிய மிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்றுமுதல் சகல பகுதிகளிலும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

இன்று யாழ்ப்பாணத்திலும், நாளை நல்லூரிலும், 11ஆம் திகதி வியாழக்கிழமை மானிப்பாயிலும், 13ஆம் திகதி வட்டுக் கோட்டையிலும், 19ஆம் திகதி காங்கேசன்துறையிலும், 21ஆம் திகதி பருத்தித்துறையிலும், 22ஆம் திகதி தீவகத்திலும் பிர சாரப் பணிகள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.(ம-5)

### கந்தர்மடம் பகுதியில் நேற்றுச் சம்பவம்

# சுயேச்சைக் குழுவினது துண்டுப்பிரசுரங்கள் எரிப்பு

### குடாநாட்டில் முதலாவது தேர்தல் வன்செயல்

கந்தர்மடம் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக் குழுவின் துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் என்பன இளைஞர் கோஷ்டி ஒன்றினால் தீயிட்டு எரிக்கப்பட்டன.

முற்பகல் 11.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையிலும் பலாலி ஆலடிச்சந்திக்கு அண்மையாகவும் இந் தச் சம்பவங்கள் இடம்பெற்றன.

காரில் வந்த சுயேச்சைக்குழு ஆதரவாளர்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியால் எழுதப்பட்ட மாவை சேனாதி ராசாவின் மறுபக்கம் என்ற புத்தகத்தையும் விநியோகித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென சம்பவ இடத்திற்கு வந்த இளைஞர் கோஷ்டி ஒன்று சுயேச்சைக்குழு ஆதரவாளர்களிடம் இருந்த துண்டுப்பிர சுரங் களையும் புத்தகங்களையும் பறித்து தீயிட்டு எரித்தது.

தீயிட்டுக் கொளுத்தப்பட்ட துண்டுப்பிரசுரங்களும் புத்தகங் களும் வீதியில் சாம்பல் மேடாகக் குவிந்திருந்தது.

இச்சம்வம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

வீ.ஆனந்தசங்கரியின் தலைமையிலான சுயேச்சைக்குழு வேட்பாளரான செ.பத்மநாதன், முன்னாள் மாநகரசபை உறுப்பி னர் செ.விஜயரட்ணம் ஆகியோர் சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றபோது "தேர்தல் தொடர்பான பிரசுரங்களை வழங்குவது சட்டவிரோத மானது. அத னால் முறைப்பாட்டை ஏற்கமுடியாது" என்று யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதி காரி மறுப்புத் தெரிவித்தார் எனவும் - பின்னர் தலைவர் வீ.ஆனந்த சங்கரியின் தலையீட்டை அடுத்து மீண்டும் முறைப்பாடு செய்யப்பட்டது என்றும் - செ. விஜயரட்ணம் தெரிவித்தார்.

குடாநாட்டில் தேர்தல் வன் செயல் சம்பவம் என பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள முதலாவது சம்பவம் இது என யாழ். பொலீஸ் நிலைய வட்டா ரங்கள் தெரிவித்தன. (ம-86)

### நாளை

மாசி 27
புதன்கிழமை
(10.03.2004)
திதி: சதுர்த்தி
சதுர்த்தி விரதம்
இரவு 12.05 வரை.
நட்சத்திரம்: சித்திரை
பகல் 10.28 வரை
சுபநேரம்: 4.53-6.23
ராகுகாலம்: 12.23-1.53
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அறிவினால் வரும் நம்பிக்கை உலகை ஆளும். அறியாமையால் வரும் நம்பிக்கை அழிவைத் தரும்.

# கொக்குவில் யுவதி கொலை வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்9

கடந்த 2001ஆம் ஆண்டு கொக்குவில் பகுதியில் யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை யாழ். மேல்நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கு கோவில் வீதியைச் சேர்ந்த செல்வி கனக சௌந்தரி என்பவரைக் கொலை செய்தார் என்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொற்பதி வீதியைச் சேர்ந்த செல்வ ராசா யோகராசா என்பவருக்கு எதிராகச் சுருக்க முறையற்ற விசாரணைகள் யாழ். நீதிமன்றில் நடைபெற்றன.

இவ்வழக்கின் விசாரணைகளே தற்போது யாழ். மேல் நீதி மன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

வழக்கிற்கான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதும் விசாரணைகள் ஆரம்பமாகும் எனத் தெரி விக்கப்பட்டது. (ம-8-5)

# யாழ். ஆஸ்பத்திரியில் வைத்தியர் நேற்று அரை நாள் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று அரைநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இத னால் சிகிச்சை பெறவந்த நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள் ளாகினர்.

அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு, சத்திரசிகிச்சைப் பிரிவு என்பன தவிர ஏனைய பிரிவுகளில் சிகிச்சைகள் அனைத்தும் அரை நாளும் தடைப்பட்டிருந்தன. இதனால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற வந்த நூற்றுக்கணக்கான நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டி ஏற்பட்டது.

சம்பள முரண்பாட்டை முன்வைத்து இலங்கை முழுவதும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று நடத்திய அரை நாள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முக மாகவே குடாநாட்டிலும் வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நாளை புதன்கிழமைக்குள் சம்பள முரண்பாட்டைத் தீர்ப் பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தை மேற் கொள்ளப்போவதாக வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது.

வேலை நிறுத்தம் இடம்பெற்ற போதும் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் விடுதி நோயா ளர்களுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன. ஏனையோர் பிற்பகல் ஒரு மணி வரை காத்திருந்த பின்னரே சிகிச்சைபெற்றனர். (ம)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களான



சிவாகம கிரிஜா ரத்தினம்
**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்**
(மூத்த நிர்வாக சபை உறுப்பினர், அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை)



ஆகம கிரிஜா ஜோதி
**சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக்குருக்கள்**
(அதிபர், சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரி)

இவர்கள் இருவரும் அகில இலங்கை சமாதான நீதிவான்களாக பதவியேற்றதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதோடு, உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரி,
*அ.இ.சை.கு.அ. சபை,*
*திருநெல்வேலி.*

(29445) (22-16-12)

பிரதி அதிபர்,
விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்.

# பிறந்தநாள் வாழ்த்து



09.03.1955

இன்று தனது 49ஆவது பிறந்த தினத்தை மகிழ்வுடன் கொண்டாடி இன்புறும்

## திரு. ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை

(பிரபல மில் உரிமையாளர்)

அவர்களை அன்பு மனைவி லட்சுமி, மகள் சுனிதா, மகன் சிவதாசன், மகள் சுபத்திரா, மகள் சிவதர்சினி மற்றும் அத்தான் நாகலிங்கம், அக்கா செல்வராணி ஆகியோர் இறைவனுடைய அருள்பெற்று ஆசிபெற்று சீரோடும் சிறப்போடும் நலமுடன் வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றார்கள்.

*"அன்னை இல்லம்"*
*தூதாவளை,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

(29444)(31-16-12)

- குடும்பத்தினர்.

# முக்கிய அறிவித்தல்

## ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயில் காணிகளில் குடியிருப்போர் வாடகை/குத்தகை செலுத்தாதவர்கள

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவிலுக்குரிய காணிகளில் குடியிருப்போர் தவறாது குத்தகைப் பணத்தை செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும். மேற்கூறிய ஆலய காணிகளில் சிலர் அத்துமீறி குடியிருக்க முற்படுகின்றவர்கள் மீதும், குத்தகைப் பணம் செலுத்த தவறியவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தர்மகர்த்தாக்கள்:
இரட்ணசபாபதி தியாகராஜா,
திலீபன் தியாகராஜா,
S.குமாரதேவா.

(29433) (16-12)

# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி அழைப்பும்

பிறப்பு
07 - 05 - 1930



இறப்பு
18 - 02 - 2004

## அமரர் வட்டர் செல்லத்துரை

*அன்போடும் பண்போடும் ஆதரவாய் இருந்தீர்!*
*நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு மறையவே மறையாது!*
உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

இன்று (09-03-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நண்பகல் இடம்பெறுகின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நாவற்குழி கிழக்கு,*
*தச்சன்தோப்பு.*

(29443) (21-18-16)

பிரிவால் கலங்கித் தவிக்கும்:
**செ.மகேஸ்வரி** (மனைவி).

# மகளிருக்கான பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்9

சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மகளிருக்கான இலவச பயிற்சி நெறிகளை அதன் தலைமை அலுவலகத்தில் நாளை புதன்கிழமை முதல் நடத்தவுள்ளது.

தையல், மனையியல், முகாமைத்துவம் மற்றும் முதலுதவி போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதால் பயிற்சிபெறவிரும்பும் மாணவிகள் தங்கள் விவரங்களை நாளை நேரடியாகவே பதிந்து கொள்ளுமாறு சங்கத்தின் பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (ம-6)

# பதவி உயர்வு

வடமராட்சி கிழக்கு,மார்ச்9

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜே. சீவரத்தினம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 1 இற்கு பதவி உயர்வினைப் பெற்றுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு இப்பதவி உயர்வினை வழங்கியுள்ளது.(ஓ-182)

# தேவை

நல்லநிலையிலுள்ள HIACE (ஹையேஸ்), டொல்பின் (DOLPHIN) ரக வான் உடனடியாகத் தேவை.

*தொடர்பு:*
**சிறீக்குமார் (பாபு)**
கல்பனா பேக்கறி
அச்சுவேலி.
**T.P. : 0777 113869**

(C/33961)

# சாரதிகள் தேவை

கொழும்பு மாநகரைத் தலைமையகமாகக் கொண்டு நாடு முழுவதும் செயற்படுகின்ற ALERIC DARIECS LTD. யாழ். பிராந்திய காரியாலயத்துக்குச் சாரதிகள் (AUTO, SALES VAN) தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு:*
198. கண்டி வீதி (கச்சேரியடி),
யாழ்ப்பாணம் (29448)(40-16-12)

# தவறிவிட்டது

கந்தையா அருமைத்துரை என்பவரின் தே. அ.அ. (இல.481072875V), வாகன சாரதிப் பத்திரம் (இல.239168), வீசேட அ.அ. என்பன திருநெல்வேலிச் சந்தி விவசாய பீடத்திற்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: இல.: 964, கே.கே.எஸ். வீதி, வேனுகா கொமினிக்கேசனில் (நாச்சிமார் கோயிலடி) ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/33964)

# தொலைபேசி இயக்குநர் தேவை

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள தொலைபேசி இயக்குநர் தேவை.

*தொடர்பு:-*
**பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்**
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

(29431)(38) (16-12)

# வைத்தியம்

செங்கண் மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459

(29441)

# கண்ணி அகற்றும் பணிகள் வடமராட்சி கிழக்கில் துரிதம்

கரவெட்டி,மார்ச்9

வடமராட்சி கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் பணி துரித கதியில் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கற்கோவளம் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்களிலும் அதை அண்டிய பகுதிகளிலுமே மேற்படி கண்ணிவெடி அகற்றும் பணி நடைபெறுகின்றது.

இதுவரை சுமார் 250 கண்ணிவெடிகளைத் தாம் மீட்டதாகவும மேலும் அங்குள்ள கண்ணிவெடிகளை அகற்றவதற்கு குறைந்தது 3 மாதமாவது தேவைப்படும் என கண்ணிவெடிப் பொருள்களை அகற்றும் பணியதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-70)

# வரதன் லேனோர்ஸ்

## முக்கிய அறிவித்தல்

கனரக வாகனத்திற்கு 'லைசென்ஸ்' எடுக்க விண்ணப்பஞ் செய்த அனைவரும் நாளை (10-03-04) புதன்கிழமை எமது யாழ். அலுவலகத்துக்கு தவறாது சமுகமளிக்கவும்.

- வரதன் லேனோர்ஸ் நிர்வாகத்தினர்.

யாழ்ப்பாணம். (29442)(21-16-12)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியரான
சி.சிவனேந்திரராசா அவர்களின்
அன்புத் தந்தையார்

## ந.இரத்தினகோபால்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– யாழ். பல்தொழில்நுட்ப ஊழியர் சிக்கன சேமிப்பு கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்.

(29447)(38-16-12)

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வலிங்கம் சிறிதரன் (சிறி)

திருநெல்வேலி, காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சிறிதரன் அவர்கள் 07.03.2004 அன்று சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் பத்மலோஜினியின் அன்புக் கணவரும் விதுர்ஷனின் அன்புத் தந்தையாரும் விஸ்வலிங்கம் - தங்கரத்தினம் தம்பதிகளின் புதல்வரும் சரவணமுத்து - சரஸ்வதி ஆகியோரின் மருமகனும் விஜயகுமார், விஜயராணி, இரத்தினகுமார், காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் சூரியகுமார், சத்தியலிங்கம், தியாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலா தேவி, சுந்தரலிங்கம், சுபத்ரா, கனகம்மா, மகாலஷ்மி, அன்னலட்சுமி, அமிர்தா, காலஞ்சென்ற குணரத்தினம், விஜயரட்ணம், கிருஸ்ணவேணி, ஜெயரட்ணம் (சுவிஸ்), சுலோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (13.03.2004) சனிக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோவிலடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(29449)(40-16-12)

தகவல்:-
வி.விஜயகுமார்,
(சகோதரன்)

## அருட்சகோதரி லெற்றீசியா வஸ்தியாம்பிள்ளை

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி லெற்றீசியா 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை - மரியமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் சந்தியாப்பிள்ளை இராசையா, திருமதி றோசம்மா மத்தியாஸ், திருமதி ஞானம்மா வரப்பிரகாசம், காலஞ்சென்ற திருமதி இராசம்மா சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட்பணி மங்களராஜா (அதிபர், கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடம்), அருட்சகோதரி யோலண்ட் (அதிபர், யா/ திருக்குடும்ப கன்னி யர்மடம்), அருட்சகோதரி யோசபின் (அதிபர், யா/இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் பேர்த்தியும் அருட்சகோதரி திரேஸ் (அன்னை திரேசா தியானயோக சபை) அவர்களின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட சிற்றாலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்பு புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உறறார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரவெட்டி.*

(29446)(34)

தகவல்:
வ.ச.இராசையா
(சகோதரன்)

## திருமதி நடராஜா ஞானம்மா

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் 53A, பலாலி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா ஞானம்மா நேற்று (08.03.2004) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு காலமானார்.

அன்னார் நடராஜாவின் அன்பு மனைவியும் செல்லத்துரை - காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை (பரமு), இராசம்மா (சிவன் கோயிலடி, காரைநகர்) ஆகியோரின் அன்பு மருமகளும் நல்லம்மா ஏகாம்பரம் (புடைவை மாளிகை, யாழ்ப்பாணம), ஞானப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தியாகராஜா, காலஞ்சென்ற கனகரத்தினம், பராசக்தி மார்க்கண்டு (கனடா), கமலாம்பிகை, நித்தியலட்சுமி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

*53A, பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(சி33965)(39-16-12)

தகவல்:
நடராஜர் (கணவர்).
**T.P: 2226653**

# இலட்சிய வேட்கையுடன் மக்கள் வாக்களிக்க வேண்டிய சூழல் இது

## தேசியப் பட்டியல் வேட்பாளர் குமாரவடிவேல் தெரிவிப்பு

வலி.வடக்கு,மார்ச்9

மூன்று தசாப்தங்களின் முன்னர் மக்கள் இலட்சியப்பற்றுடன் வாக்களித்தார்கள். அதன்பின்னரான இடைக்காலத்தில் அத்தகைய சந்தர்ப்பங்கள மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், மீண்டும் அத்தகைய இலட்சியப்பற்றுடன் வாக்களிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு யாழ். மாவட்ட தேசியப்பட்டியல் வேட்பாளர் செ.குமாரவடிவேல் தெரிவித்தார்.

சங்கானைப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் சங்கானைப பிரதேசப் பொறுப்பாளர் அன்பு தலைமையில் சங்கானையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய குமாரவடிவேலு தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு தசாப்த காலங்களுக்குமேலாகத் தேர்தலில் இருந்து விடுபட்டு வேறுபாதையில் சென்று கொண்டிருந்த மக்கள் ஏன் திடீரெனத தேர்தலில் ஆர்வம்காட்ட வேண்டும் என்று மக்கள் கேட்கிறார்கள்?

இன்றைய தேர்தலை நாம்கொண்டு வரவும் இல்லை; அதுவரவேண்டும் என்று எதிர்பார்க்கவும் இல்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகளினது அதிகாரப்போட்டிகள் காரணமாகவே இத் தேர்தல் கொண்டுவரப்பட்டது; தமிழ் மக்கள் மீதும் சுமத்தப்பட்டது.

இத்தேர்தலை தமிழ்மக்களுடைய தலைமை அரசியல் சாணக்கியத்துடன் பயன்படுத்த நடவடிக்கையெடுத்துள்ளது. சர்வதேச சமூகம் பல்வேறு வழிகளிலும் பலவற்றையும் எதிர்பார்க்கின்றது. அவர்களின் எதிர்பார்ப்புகள் இத்தேர்தல் மூலம் வெளிக்காட்டப்படவுள்ளன.

தேர்தலை இன்று ஏன் நாம் சந்திக்கின்றோம் என்பதையிட்டு மக்களுக்குத் தெளிவாக எடுத்து விளக்கிக் கூற வேண்டும் . அதன் மூலமே தேர்தலை தமிழர் பயன்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிகொள்ளச் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் உணரச் செய்ய முடியும்.

கடந்த காலங்களில் மக்கள் எழுச்சி பெற்று தமிழ் ஈழத்திற்கும் சுயநிர்ணயத்துக்கும் வாக்களித்துள்ளார்கள. அதே உணர்வை மக்கள் நடைபெறவுள்ள தேர்தலிலும் காட்ட வேண்டியது அவசியம்.

வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் எமது தேவைகளைப் பூர்த்திசெய்வார்களா? எம் மத்தியில் நின்று சேவையாற்றுவார்களா? என்ற கேள்விகளும் மக்களிடையே தோன்றுகின்றது. எனவே, இது சம்பந்தமான விளக்கத்தையும் தெளிவையும் மக்களுக்குக் கூறுவது எங்கள் ஒவ்வொருவருடையதும் கடமையாகும்.

மக்களிடம் இன்று பல்வேறு கேள்விகளும் தொக்கி நிற்கின்றன. அவர்கள் கேட்கும் கேள்விகள் அனைத்திற்கும் பதில் கூற வேண்டியது எமது கடமையும் பொறுப்புமாகும். அதனை யாரும் தட்டிக்கழிக்க முடியாது - எனவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உரையாற்றும் போது கூறியதாவது:-

சர்வதேச நாடுகள் இன்று எம் முன்னிலையில் பல்வேறு கேள்விகளுடன் கூடிய கேள்வித்தாளை முன்வைத்து விடையளிக்கக் கேட்கின்றன. நாம் சரியான விடையை தெளிவான முறையில் அளிப்போமாக இருந்தால் உயர்ந்த சித்தியை அடையமுடியும்.

அந்த வகையிலேயே, தேர்தலும் எம் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதனை நல்ல முறையில் சந்தித்துச் சர்வதேச நாடுகளின் பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியும் இதனை மக்கள் செய்துமுடிக்க வேண்டும்; செய்துகாட்ட வேண்டும்.

ஆயுதம் மூலம் பெறமுடியாத சிலவற்றை நாம் அரசியல் மூலம் பெற வேண்டியது அவசியமாகும். ஆயுத பலத்தை தமிழன் தக்கவைத்துக் கொண்டு அரசியல் மூலம் எமது எண்ணங்கள், சிந்தனைகளை நிறைவேற்ற முடியுமானால் அதனையும் செய்து முடிக்கவேண்டும்.

சர்வதேச நாடுகளுடைய அங்கீகாரத்தை நாம் பெற சில நடவடிக்கைகளை இன்று செய்யவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம. 'பொங்குதமிழ்' நிகழ்வு மூலம் மக்கள் தமது எண்ணங்கள், உணர்வுகளை வெளிப்படுத்திய போதும் அதனைச் சர்வதேச சமூகம் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

சர்வதேச ரீதியாகப் புலிகளின் அங்கீகாரத்திற்கும் மக்களுடைய ஆதரவிற்கும் இத்தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும். இது ஓர் எழுத்து மூலமான ஆதாரமாகவும் அமையமுடியும்.

புலிகள் மீது இன்று அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் விதித்துள்ள தடைகளையும் இதன் மூலம் நீக்க முடியும். நாம் சர்வதேச மட்டத்தில் முழுமையான அங்கீகாரத்தைப் பெற்று அதிக பலன்களையும் பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் ஏற்படும் - எனவும் குறிப்பிட்டார். (ம-86)




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்டப் பணிமனைத் திறப்புவிழா அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் இரா. சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பு ஆதரவாளர்களைப் படத்தில் காணலாம்.




# அரச ஊடகங்களைக் கண்காணிக்க விரைவில் தகுதிவாய்ந்த அதிகாரி

## தேர்தல் ஆணையாளர் நியமிப்பார்

கொழும்பு,மார்ச்9

சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலொன்றை இடம்பெறச்செய்யும் நோக்கில், விரைவில் அரச ஊடகங்களைக் கண்காணிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பதற்குத் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அல்லது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மூலம் தேர்தல் சட்டங்கள் மீறப்படுமாயின் அவற்றிற்கு அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கமைய தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உள்ளது.

அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி நியமனம் செய்யப்பட்ட திகதியில் இருந்து ஒலிபரப்பப்படும் சகல அரசியல் ஒலிபரப்புக்களும் வாக்களிப்பைப் பாதிக்கும் எனக் கருதப்படுமாயின் - சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு - வாக்களிப்பு முடியும் வரையில் (ஒளி) ஒலிபரப்புச் செயற்பாடுகள் தகுதிவாய்ந்த அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும். தகுதிவாய்ந்த அதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு 2002 ஆம் ஆண்டின் இலக்கம் 03 ஐக் கொண்டுள்ள நாடாளுமன்ற சட்டவிதி அனுமதி வழங்கும்.

இத்தேர்தல் காலங்களுள் அரச ஊடகங்கள், பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளதாக இதுவரை 75 கடித மூலமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

இம்முறைப்பாடுகளுள் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர், கரு ஜெயசூரியவின் இரு முறைப்பாடுகளும் அடங்கியுள்ளன.

மேற்படி முறைப்பாடுகளை ஆராய்ந்த பின்னர் அவை தொடர்பாகத் தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகளின் பின்னரே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் வெளியீடு!

கொழும்பு,மார்ச்9

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல விஞ்ஞாபனம் எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைத்திட்ட விளக்கத்தைத் தொடர்ந்து, ஐ.தே.கட்சியின் 'பொய்ப்பிரசாரங்கள் புஸ்வாணமாகிப் போகுமென சுதந்திர முன்னணியின் சமகாலத் தேசிய இணைப்பாளரும் எதிரணித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்ந்தும் ஐ.தே.கட்சி, பொய்களைக் கூறி, மக்களை ஏமாற்ற முடியாது. உண்மையான அரசியல், பொருளாதார, சமூக சுதந்திரத்தை வழங்கக்கூடிய அத்திட்டங்களை மக்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளுவார்கள். அத்திட்டங்கள் மூலம், நாட்டைச் சுபீட்சத்தை நோக்கி இட்டுச செல்ல, ஐ.ம.சு.முன்னணி அரசு செயற்படும். இக்கொள்கை விளக்கத்தில் நாட்டைப் பாதிக்கும் ஆறு முக்கிய விடங்களும் உள்ளடங்கப்படவுள்ளதோடு, ஸ்ரீலங்கா, இன்று எதிர்நோக்கியுள்ள சிக்கல்களைத் தீர்த்து வைக்கக்கூடிய வழிவகைகளும் அதில குறிப்பிடப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தைக் கட்டியெழுபபும் புதிய திட்டம், சமாதானத்தைப் பாதுகாத்தல், தற்போதுள்ள தேர்தல முறையைத் திருத்தியமைத்தல், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தை, மக்களைப் பாதுகாக்கும் வகையில் பிரயோகித்தல் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வித்திட்டங்களை அமைத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இதில் அடங்கவுள்ளன - என்றும் ராஜபக்ஷ தெரிவித்தார். (ம)

## குருநகரில் தேர்தல் பிரசாரம்

குருநகர்,மார்ச்9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களில் ஒருவரான சொலமன் சூசிறில் கடந்த 6ஆம் திகதி குருநகர்ப் பகுதியில் தனது தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டனர்.

குருநகர் பாங்ஷால் வீதி, கடற்கரை வீதி ஆகியவற்றில் உள்ள குடியிருபபாளர்களின் வீடுகளுக்குச் சென்ற இவர், தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக விளக்கிக்கூறினார்.

தனது படத்துடன் தேர்தல் சின்னம், இலக்கம் பொறிக்கப்பட்ட பிரசுரங்களையும் அவர்களுக்கு வழங்கினார். (ம-8-51)

# தேசிய எழுச்சியை உலகுக்குக் காட்ட தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்

## அரசியல்துறைப் பள்ளிப் பொறுப்பாளர் உரை

தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை ஜனநாயக வழியில் உலகுக்கு எடுத்துக்காட்டுவதற்கு இத்தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிதது எமது தேசிய எழுச்சியை உலகுகக்கு உணர்த்த வேண்டும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பள்ளிப் பொறுப்பாளர் அரசண்ணா, பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பருத்தித்துறை தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த அ.ம.செபஸ்ரியன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அரசண்ணா பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழ் இனத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தீர்மானம் எடுக்க வேண்டிய இக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமையை இத்தேர்தலில் காட்டவேண்டும்.

புள்ளடி இடுவதில் எமக்கு நம்பக்கையில்லாதபோதும் புள்ளடி போட்டுத் தன்னாட்சி, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தேசியத் தன்மையை உலகுக்கு வெளிக்காட்டி அது பற்றிப் பேசுவதற்கு நாம் வீட்டுச்சின்னத்தை ஆதரித்து நிற்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழ்த் தலைவர்கள் அஹிம்சை வழியில், ஜனநாயக முறையில் போராடிய போது ஸ்ரீலங்கா அரசு ஆயுத கலாசாரத்தின் மூலம் பதிலடி கொடுத்து அடக்க முற்பட்டது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் 1961ஆம் ஆண்டு தமிழ்மக்களின் உரிமைக்காக தமிழ்த் தலைவர்கள் சத்தியாக்கிரகம் நடத்தியபோது ஆயுத முனையில் அடக்கப்பட்டார்கள். 1977இல் பொதுத் தேர்தல் மூலம் தமிழர்கள் சார்பில் எதிர்க்கட்சித் தலைமையைக் கைப்பற்றியபோது இனமோதல் கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழர்களின் உயிர்களும், சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

இத்னையடுத்தே ஆயுதப்போராட்டம் கூர்மையடைந்து பல வெற்றிகளை ஈட்டியது. ஆயுதப் போராட்டத்தின் மூலம எமக்கென்று ஒருபடை, நிலம, நிர்வாகக் கட்டமைப்பு, கலை, பண்பாடு, மொழி என்பன உண்டு என்பதைச் சர்வதேசத்துக்கு வெளிக்காட்டினோம். தொடர்ந்து 2001இல் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வின் மூலம் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை வெளி உலகுக்குக் காட்டினார்கள்.

ஜனாதிபதி ஒரு பொதுத் தேர்தலை அறிவித்துள்ள இந்நிலையில் மீண்டும் ஜனநாயக வழியில் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியைக் காண்பிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எமது தலைமையை ஏற்றுத் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பினரை விடுதலைப் புலிகள் ஆதரித்து நிற்கிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தபோது அரசியல் நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்த போராளிகளிடம் நீங்கள் உறுதியுடன் நிராயுதபாணிகளாகச் செல்லுங்கள. உங்களுக்குக் கவசமாக மக்கள் இருந்து காப்பாற்றுவார்கள் என எமது தலைவர் அவர்களுக்குக் கூறினார். அதேபோல அரசியல் துறையைச் சேர்ந்த செம்மணன், தயா போன்றவர்களை மக்கள் கவசமாக இருந்து காப்பாற்றியுள்ளார்கள். எனவே, எச் சந்தர்ப்பத்தில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்று எமது தலைவர் புரிந்துவைத்துள்ளார்.

பொதுத்தேர்தலில் மக்கள் அனைவரும் தமது ஆதரவை ஒட்டு மொத்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கி தமிழ்த் தேசியத்தின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்யவேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் மிகப் பெரிய துரோகத்தை தமிழ் இனத்துக்கும், இயக்கத்துக்கும் கருணா செய்துள்ளார். இதனால் இயக்கத்திலிருந்தும் பொறுப்புகளில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார். புதிய தளபதிகள் பொறுப்புக்களை ஏற்று கிழக்கிற்கு சென்றுள்ளார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்று யாரும் தனி இயக்கம் ஆரம்பித்த வரலாறு கிடையாது. தற்போதைய வெடிபபினைப் பயன்படுத்தி சிலர் அரசியல் நடத்த விரும்புகிறார்கள். இவர்கள் இதிலிருந்து விலகிச்செல்ல வேண்டும். இல்லையேல் அவர்களும் இவ் வெடிப்புக்குள் அமுங்கி விடுவார்கள. தமிழ் மக்களின் ஊட்டத்தில் தான் விடுதலைப் புலிகள் இயக்கம் வளர்நததது. புலிகள் இயக்கம் மக்கள் பலததையே நம்பியுள்ளது - என்றார்.

(ம-173-182)

# மக்கள் சுதந்திரமாகக் கௌரவத்துடன் வாழவே இந்தத் தேர்தலில் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்9

எமது சமூகம் சந்தித்திருக்கும் பேரவலங்களிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதுடன் எமது மக்கள் சுதந்திரமாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கான நிலைமைகள் தோற்றுவிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தவே எதிர்வரும் தேர்தலில் பங்கு கொள்கிறோம்.

- இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (வரதர் அணி) மூத்த தலைவர்களில் ஒருவரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான திருநாவுக்கரசு ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நாங்கள் விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் அண்டை நாடுகளுடன் பகையை வளர்த்துக்கொள்ளக் கூடாது. எமக்கு ஆபத்து என்றால் அயல் நாடுகள்தான் உதவி செய்ய வேண்டும். இந்தவகையில், நாம் அயல் நாடுகளுடன் நட்புறவைப் பேணிக்கொள்ள வேண்டும்.

கால் நூற்றாண்டு காலப் போரினால் சொல்ல முடியாத வேதனைகளையும் ஈடு செய்யமுடியாத இழப்புக்களையும் எம்மக்கள் சந்தித்திருக்கிறார்கள். இந்த மக்களுக்கு நிரந்தர சமாதானமும் சுதந்திரமான வாழ்வும் அவசியமாகியுள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து இன, மத சமூகங்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடு ஆகும். அதிகாரப் பகிர்வினூடாகவே மக்கள் சமூகங்களை ஐக்கியப்படுத்த முடியும். சமூக, பொருளாதார அபிவிருத்தியைத் தங்கு தடையின்றி மேற்கொள்ள முடியும்; அமைதியை நிலை நிறுத்த முடியும்.

போர் நிறுத்தமும் பேச்சும் தொடர வேண்டும் என்பதில் எமக்கு மாறுபட்ட கருத்து இல்லை. சமாதானம் தொடர்ந்து நிலவவேண்டும்.

எமது மக்கள் போரினால் ஏற்பட்ட பேரழிவில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். பொருளாதாரம், விஞ்ஞானம், இலக்கியம், கலை ஆகிய துறைகளில் மானுடப் பண்புகளுடன் பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ள எமது மக்கள் தயாராக வேண்டும்.

ஈழத்தமிழ் சமூகம் உலகளாவிய சமூகம். இந்தச் சமூகம் தனது சொந்தத் தளத்தில் தன்னை மாண்புற அமைத்துக்கொள்ள நிறையவே வாய்ப்புக்கள் உண்டு.

இன்றைய நிலையில் தமிழ் ஊடகங்கள் யதார்த்த ரீதியான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவேண்டும். சரியான கருத்துக்கள் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படும் போதுதான் மக்கள் உண்மை நிலையினை விளங்கிக் கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (ம-ரி)

**கமமும் புலமும்**

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# யாழ். நீர்வளம், நிலவளம் ஆகா எத்தனை அருமை...!

நீர்வளம் உண்டு, நிலவளம் உண்டு, நிம்மதி ஒன்றுதான் இல்லை என்று அன்று பாடினார் தமிழீழக் கவிஞர் ஒருவர். இன்று அந்தப் பாடலில் குறிப்பிட்ட நீர்வளம், நிலவளம் என்பன பற்றிச் சான்றிதழ் கொடுத்துள்ளனர் இந்திய விஞ்ஞானிகள்.

என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? விஞ்ஞானிகள் அதுவும் இந்திய விஞ்ஞானிகள் எமது நீர்வளத்துக்கும் நிலவளத்துக்கும் சான்றிதழ் கொடுத்துள்ளார்கள் என்று எண்ணுகிறீர்களா? ஆம், கடந்த மாதம் 28 ஆம் திகதிதான் சான்றிதழ் கொடுத்தார்கள்.

ரம்மியமான மாலைப் பொழுதில் யாழ்ப்பாணம் - பலநோ.கூ.சங்க கேட்போர் கூட மண்டபத்தில் வைத்துத்தான் சான்றிதழ் வழங்கினார்கள். யாழ். மாவட்டத்தில் உள்ள இயற்கை உரப் பாவனையாளர்களுக்கான அறிமுகவிழா அங்குதான் நடைபெற்றது. அதில் கலந்துகொள்வதற்காக இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் இருந்து வருகை தந்திருந்த மூன்று விஞ்ஞானிகள்தான் எமது நீர்வளம் பற்றியும் நிலவளம் பற்றியும் பெருமையாகப் பேசினார்கள்.

இயற்கை உரப் பாவனையாளர்களுக்கான அறிமுக விழா என்றதும் மண்டபம் முழுவதும் விவசாயிகள் நிறைந்து காணப்படுவார்கள் என்று எண்ணிச்சென்ற எமக்கு பெரும் ஏமாற்றம்தான் மிஞ்சியது. நிகழ்வு மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததாலோ என்னவோ விவசாயத் திணைக்களம் யாழ். மாநகரசபை மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சிலரே வருகை தந்திருந்தனர்.

ஆயினும், ஒருவாறாக மாலை 6.45 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. இதில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த இந்திய விஞ்ஞானிகளான ஜி.பி.செட்டி, எஸ்.மணிவேல், பி.குமாரவடிவேல் ஆகிய மூவரும் கருத்துரைகளை வழங்கினார்கள். மூவரும் குடாநாட்டு மண்வளம், நீர்வளம் ஆகியன பற்றி மிகவும் பெருமையாகச் சொன்னார்கள். புகையிலை, வாழை, தென்னை போன்றவற்றுடன் பழப்பயிர்கள், பூப்பயிர்கள் போன்றவற்றையும் செய்கை பண்ணக்கூடிய மண்வளம் குடாநாட்டில் உள்ளதாகத் தெரிவித்த அவர்கள், புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்த வேண்டும் எனவும் அவ்வாறு புகுத்தினால் சிறந்த விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தனர்.

பெருமளவிலான நிலங்கள் செய்கைபண்ணப்படாமல் உள்ளமை கண்டு ஆதங்கமடைந்த அவர்களுக்கு கடந்தகால யுத்தத்தினால் தான் இவை செய்கைபண்ணப்படாமல் உள்ளமை பற்றித் தெரிவித்ததும் சமாதானமடைந்தனர். இயற்கை உரப் பாவனையின் மூலம் பயிர்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றிக் குறிப்பிட்ட அவர்கள், இயற்கை உரம இடுவதால் பயிர்களுக்கு எந்தவித நோய்த் தாக்கங்களும் ஏற்படாது எனவும் குறிப்பிட்டனர். மண்ணில் உள்ள போசனைப் பதார்த்தங்களின அளவு மற்றும் தன்மை பற்றி பரிசோதிக்கவேண்டும் N.P.K போன்ற இரசாயனப் பசளைகளை அளவுக்கதிகமாகப் பாவிப்பதும் பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும். மண்ணானது ஒரு வங்கி போன்றது. அந்த மண்ணுக்கு வங்கியில் பணம் இடுவதைப் போன்று போசனைப் பதார்த்தங்களை இட்டால்தான் வங்கியில் இட்ட பணத்தினை எடுப்பது போன்று பயன்பெறலாம் என்று தெரிவித்தார் விஞ்ஞானி எல்.மணிவேல்.

இயற்கை உரமான 'மல்டிபிளெக்ஸ்' எனப்படும் நெற்பசளையானது அமோக நெல் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கும் பெரிதும் உதவுகின்றது. கடந்த 28 வருடங்களுக்கு மேலாக இந்திய விவசாயிகள் 'மல்டிபிளெக்ஸ்' நெற்பசளையையே பாவித்துவருகின்றனர். இதில மக்னீசியம், கல்சியம், கந்தகம், மங்கனீஸ், போரன், இரும்பு போன்ற போசணைப் பதார்த்தங்கள் அடங்கியுள்ளன.

இதனைப் பயிர்களுக்கு இடுவதன் மூலம் மண்ணின் அமிலத்தன்மை குறைவடைகிறது. விளைச்சலுக்குத் தேவையான போசனை கிடைக்கிறது. பயிரின் வளம் மேம்படுவதுடன்




இந்தியாவில் இருந்து வருகைதந்த விஞ்ஞானிகள்.

நோய் எதிர்ப்புச் சக்தியும் உருவாகிறது. முழுதும் நிரம்பிய நெல் மணிகள் உருவாகுவதுடன், அதிக விளைச்சலும் கிடைக்கிறது என்று அந்த இயற்கை உரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் அவர்கள்.

எமது விவசாயிகள் எதிர்வரும் காலத்தில் இதனைப் பயன்படுத்திப் பயன்பெறலாம் எனத் தெரிவித்ததுடன், இலங்கை விவசாயிகளுக்காக அதுவும் வடக்கு-கிழக்கு விவசாயிகளுக்காக தாம் என்றுமே உதவி செய்யக் காத்திருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

எலுமிச்சை மற்றும் மூலிகைச் செடிகளையும் எமது குடாநாட்டு மண்ணில் நன்கு செய்கை பண்ண முடியும் எனவும், அவ்வாறு செய்கை பண்ணுவதன் மூலம் அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க முடியும் எனவும் குறிப்பிட்ட விஞ்ஞானிகள், இந்தியாவின் பல இடங்களில் குறிப்பாக ராஜபாளையத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் எலுமிச்சை செய்கை பண்ணப்பட்டு வருவதாகவும் அவை ஆஸ்திரேலியா, டுபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

இவைமட்டுமல்ல, அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு சதுர அடி நிலம்கூட வீணாக இருக்கக்கூடாது என்பதுதான் கொள்கையாக உள்ளது. தென்னை மரங்களுக்கு இடையில் ஊடுபயிற் செய்கையில் ஈடுபடலாம் எனவும், ஊடுபயிராக எவ்வளவு பயிர்களைச் செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டது மட்டுமன்றி தமது நாட்டில் 'வனிலா' செடிகளை ஊடுபயிராகச் செய்து வருவதாகவும் கூறினார்கள்.

திராட்சைச் செடியில் உள்ள காய்களில் தரமற்ற காய்களை அகற்றுவதற்கு இந்தியாவில் ஒருவகை ஓமோன்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அதன்மூலம் இலகுவாக அவற்றை அகற்ற முடியும் எனவும் குறிப்பிட்ட அவர்கள், எமது நாட்டிலும் அவ்வாறு ஈடுபட முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். விவசாயிகளுக்குப் பெரிதும் நன்மை பயக்கக்கூடிய இந்த நிகழ்வில் நிறைய விவசாயிகள் கலந்து கொண்டிருந்தால் அது அவர்களுக்கு நன்மை அளிப்பதாக அமைந்திருக்கும் ஆனால், அவ்வாறு விவசாயிகள் கலந்து கொள்ளவில்லை.

இதுகுறித்து விவசாயத் திணைக்களத்தின் பாடவிடய உத்தியோகத்தர் கா.நல்லதம்பியிடம் நாம் கேட்ட பொழுது, நிகழ்வுக்கான பொருத்தமற்ற இடம், நடைபெற்ற நேரம் என்பன சரியாக அமையாததே காரணம் என்றார். யாழ். நகரப் பகுதியில் இதனை நடத்தாது வேறொரு இடத்தில் நடத்தியிருக்கலாம் எனவும் நேரம் பொருத்தமானதாக அமையவில்லை எனவும் குறிப்பிட்டார். உண்மைதான் பிற்பகல் 3.30 மணியளவில் இதை நடத்தியிருந்தால் ஓரளவு விவசாயிகள் வந்திருப்பார்கள் என்பதுதான் நிகழ்வுக்கு வந்திருந்தோரின் பொதுவான அபிப்பிராயமாக இருந்தது.

எப்படியோ இவ்வாறான ஒரு நிகழ்வுக்கு ஏற்பாடுசெய்த எம்.எல். **வைஷாலி** அன்.கோ நிறுவனத்தினர் பாராட்டப்பட வேண்டியவர்களே. இவ்வாறான பல நிகழ்வுகளை எதிர்காலத்திலும் அவர்கள் ஏற்பாடுசெய்யவேண்டும். அதன் மூலம் விவசாயிகள் பயனடையட்டும்.

என்ன விவசாயிகளே பெரிய அளவில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு இயற்கை உரப்பாவனையில் நாட்டம் செலுத்தப் போகிறீர்களா? ★

# அகத்தி எமக்குப் புறத்தியல்ல அதனால் எமக்குப் பெரும் உயர்ச்சி

'அகத்தி ஆயிரம் காய்த்தாலும் புறத்தியே புறத்தி' என்பது பழமொழி. வீட்டுவளவில் அகத்தி வளர்க்கக்கூடாது என்பர் நம்முன்னோர். ஆனால், அகத்தியில் இருந்து பெறப்படும் பயன்பாட்டை உணர்ந்தவர்கள் இந்த மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு விடுவர்.

அகத்தி ஓர் அவரை இனப்பயிர். இதன் தாவரவியல் பெயர் "செஸ்பேனியா கிருண்டி புளோறா" (Sesbania Grandi Floro) என்பதாகும். இந்தியாவைப் பிறப்பிடமாக கொண்ட அகத்தி சமஸ்கிருதத்தில் "அகஸ்தயா" என்றும், சிங்களத்தில் "கத்துறு முறுங்கா" என்றும் அழைக்கப்படும். அகத்தியில் வெண் அகத்தி, செவ்வகத்தி என இருவர்க்கங்கள் உண்டு.

நீண்டகாலமாக எம்மவரால் உண்ணப்பட்டுவரும் இக்கீரை சிறந்த மருத்துவ இயல்புகளைக் கொண்டது. இலகுவாகச்செய்கை பண்ணக்கூடிய இக்கீரை, எந்தவித நச்சுப் பொருள்களும் (கிருமிநாசினி) விசிறப்படாத சுத்தமான கீரையாகும். ஒவ்வொருவீட்டிலும் ஒன்று இரண்டு மரங்களை நடுவதன்மூலம் பலன் பெறலாம். மேற்கூறிய இருவகை அகத்திகளின் இலை, பூ என்பன உணவுக்குப் பயன்படுத்தப்பட்டாலும் நமது பிரதேசத்தில் வெண் அகத்தியே பிரசித்திபெற்றது.

## காலநிலையும், நடுகைநிலையும்

சூடான காலநிலை அகத்திக்கு உகந்தது. குளிர்பிரதேசமான மலை நாட்டில் இதனை வளர்க்கமுடியாது.

விதைகளில் இருந்து நாற்றுமேடைகளில் நாற்று நட்டு அவற்றைப்பின் நடுகை செய்யலாம் விதைகள்முளைக்கும் வரை நீரூற்றவேண்டும். அதன் பின் காலநிலைக்கேற்ப இரண்டு மூன்று நாள்களுக்கொரு முறை நீரூற்ற வேண்டும். 15 - 20 ச.ம உயரமுடைய நாற்றுக்களே நடுகை செய்ய உகந்தவை

45x45x45 ச.மீ அளவில் தயாரிக்கப்பட்ட குழிகளில் கூட்டெரு, சாணம் போன்ற பசளைகளுடன் மேல் மண்ணையும் கலந்து இட்டு நாற்றுக்களை நடவேண்டும்.

அகத்தி சூரிய வெளிச்சத்தை விரும்பும் மரமாகும். எனவே, சூரிய வெளிச்சம் கிடைக்கக்கூடியவாறு வீட்டின் பின்புறம் வேலியோரம், மதில் ஓரம், வயல் நிலங்களில் நடவேண்டும். அதிக நாள் வரட்சி நிலவினால் அகத்தி பாதிப்படையும்.

இதன் ஆணிவேர் ஆழமாகச்செல்லும். பக்க வேர்கள் பருமனான 'பற்றீரியா' பொட்டலங்களைப் பரவி நிற்கும்.

இதனால் நிலத்திற்கு நிரந்தரமாக நைதரசன் கிடைக்கிறது. இலைகள், மலர்கள் உதிர்ந்து விழுந்து நிலத்தை மூடி மென்மைப்படுத்துவதால் நைதரசன் அதிகரித்துக் களைகளைக் கட்டுப்படுத்தி, நிலத்தை ஈரலிப்பாக வைத்திருக்கும்.

கன்றுகள் நடப்பட்டு எட்டு மாதங்களின் பின்னர் இலைகளை அறுவடை செய்யலாம். ஒருவருடத்தின் பின்னரே பூக்களைப் பெறமுடியும். காலத்திற்குக் காலம் செடிகளைக்கத்தரித்து விடுவதன் மூலம் செடிகள் அடர்த்தியாகி கூடிய இலைகளைப் பெறலாம்.

## பசளையிடல்

அகத்தி ஒரு பல்லாண்டுப்பயிர். மரத்தினைக் கத்தரிக்காது விடின் அது உயரமாக வளரும். இதனால் மரத்தின

**பரிபூரணா**

வீரியம் குறைந்து அதன் ஆயுட்காலமும் குறைந்துவிடும். அத்துடன், உயரமான மரங்களில் இருந்து இலைகளையும் பூக்களையும் பெறுவது கஷ்டமாக இருக்கும். எனவே, மரம் மூன்று, நான்கு அடி வளரும் போது குருத்துக்களைக் கிள்ளி, கிளைகள் படர்ந்து வளர வாய்ப்பளிக்க வேண்டும். இலைகள் அறுவடையைத் தொடர்ந்து சேதனப்பசளை இடுவது அவசியமாகும். சிறிதளவு யூரியாவையும் கலந்து இடலாம்.

தோட்டங்களில் அகத்தியை நடும போது ஐந்து, ஆறு மாதங்களுக்கொரு தடவை இயன்றளவு சாணம், கூட்டெரு, கோழி எரு போன்ற சேதனப் பசளைகள் இடுவது அவசியம். கரி, சாம்பல் போன்றவற்றையும் இடலாம். அகத்திக்கு எவ்விதமான இரசாயனப் பசளைகளும் இடத்தேவையில்லை. வளர்ச்சிக் காலத்தில் வேண்டுமானால் சிறிதளவு யூரியாவை இடலாம்.

## நோய்களும் பீடைகளும்

அகத்திக்குப் பெரிதாக நோய்கள், பீடைகள் ஏற்படுவதில்லை. உலர் காலத்தில் பூஞ்சண நோய் ஏற்படலாம். இதனால் பாதிக்கப்பட்ட இலைகளை உண்ணமுடியாது. வளரும் பருவத்தில் நத்தை, இலை அரிபுளு, வெட்டுக்கிளி, கிளி, மயிர்கொட்டி என்பவற்றின் தாக்கம் இருக்கும். சாம்பல் தூவுவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்தலாம். நீர் தேங்கிநிற்கும்போது வளர்ச்சி தடைப்படும். இலைகள் சுருண்டு மரம் பட்டுப்போகும் நிலை ஏற்படும். அழுகலும் ஏற்படும். எனவே, மரத்தினடியில நீர் தேங்கி நிற்காது செய்ய வேண்டும்.

## அகத்தியின் உணவுப் பயன்பாடும் மருத்துவ இயல்புகளும்

அகத்தியின் இலை, பூ, வேர், பட்டை என்பன ஆயுள்வேத மருந்துகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கண்நோய், பீனிசம், வயிற்றுப்புழு என்பவற்றைக் குணப்படுத்தும். கூந்தல் வளர்ச்சிக்கும், மலத்தை இழக்கவும் செய்யும். புற்றுநோயைக் கூடக் கட்டுப்படுத்தும் வல்லமை அகத்திக்கு உண்டு.

முருங்கை இலையைப் போன்று இரும்புச்சத்து அதிகம் உடையது. அகத்தியின் இலை, பூ என்பன மனிதருக்கு உணவாகின்றன. இலைகள் கரும் பச்சையாக இருப்பதாலும் கரற்ரீன் செறிவாக இருப்பதாலும் உயிர்ச்சத்து A நிறைவாகக் கிடைக்கிறது. 36 வீதம் புரதச்சத்துக்கொண்டது.

நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் என்பவற்றில பொரித்த அகத்தி இலை உணவுக்குச் சுவையூட்டும் ஒரு பொரியலாகும். இளம் இலைகளைக் கொண்டு பச்சடி தயார்செய்யலாம். இலையைப் பால், சொதி தயாரிக்கப் பயன்படுத்தலாம் வறை தயாரிக்கலாம். அகத்திப்பூவை எண்ணெயில் பொரித்து உண்ணலாம். அகத்திப் பூ இதழ்களை மாவில் கரைத்து தோய்த்து எடுத்து பொரித்து உண்ணலாம். கையால் உடைக்கக்கூடிய அளவு முதிர்ச்சி கொண்ட காய்களை சுடுநீரில் அவித்து ஏனைய மரக்கறிகள் போன்று சமைக்கலாம்.

அகத்தி இலைகளையும், காய்களையும் கால்நடைகள் விரும்பி உண்கின்றன. அவற்றின் உடல் வளர்ச்சியை அகத்தி அதிகரிக்கச்செய்யும். ஐம்பது அகத்திக் கன்றுகளை நட்டு சுழற்சி முறையில் நாற்பது நாளுக்கு ஒரு முறை இலை, காய்களைப் பறித்து ஒரு பசுவை ஓராண்டுக்குப் பராமரித்து பயனடையலாம். இவற்றின் இலைகளை பசுந்தாள் பசளையாகப் பயன்படுத்தலாம். முற்றிய மரங்களை விறகாகவும் பயன்படுத்தலாம். ❑

# தேர்தலுக்குப் பின் இனப்பிரச்சினை விவகாரம் மேலும் சிக்கலடைவதற்கே வாய்ப்பு அதிகம்

## ஐ.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் ஹக்கீம் கருத்து

**லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகிறது.**

★ கேள்வி: வடக்கு - கிழக்கே தமிழர்களினதும் தமிழ் பேசும் முஸ்லிம்களினதும் தாயகம். எதிர்வரும் தேர்தலில் வடக்கு - கிழக்குக்கான சுயநிர்ணய உரிமையை முன்வைக்கும் தமிழர்களின் நிலைப்பாடு பற்றி என்ன கருதுகிறீர்கள்?

● ஹக்கீம்: எவ்வாறு தமிழர்கள் தமது ஏகோபித்த பிரதிநிதித்துவத்தை வடக்கு - கிழக்கு தாயகத்துக்கான சுயநிர்ணய உரிமைக்கான ஆணையை தமிழர் தேசியக் கூட்டமைப்பும் விடுதலைப் புலிகளும் எடுத்துக்காட்டப் போகிறார்களோ அவ்வாறே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற முஸ்லிம்கள் இணைந்த வட.-கிழக்குக்குள் சுயநிர்ணய-உரிமையோடு வாழும் தகுதி வாய்ந்தவர்கள. எனவே, அவர்களுக்கும் அந்தத் தாயகத்துக்குள் சுயாட்சியை வலுப்படுத்தும் நோக்கத்தோடுதான் நாங்கள் இந்தத் தேர்தலில் மீண்டும் மக்கள் ஆணையைக் கோரியிருக்கின்றோம்.

★ கேள்வி: தமிழர்கள் தமிழ்பேசும் முஸ்லிம்களை தங்களிலிருந்து மதம் மாறிய மக்களாகவே கருதுகின்றனர். தற்பொழுது இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் உறுப்பினரான முஸ்லிம்கள் தங்களை தனியான தேசியம் என வெளிப்படுத்த முயல்வதன் காரணம் என்ன?

● ஹக்கீம்: முஸ்லிம்கள் ஒரு தனியான தேசியம் என்ற கோரிக்கை, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை, அடக்குமுறைகள் என்பன வலுவடைந்த தமிழர் தாயகக் கலாசாரம் தொடங்கிய காலத்திலிருந்து பலமடைந்து வந்துள்ளது. அதேபோன்று, தமிழர்களாக இருந்தோர் மதம் மாறியதால்தான் முஸ்லிம்களாக இருக்கிறார்கள் என்பது போன்ற கோட்பாடுகள் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்களை வலிந்து மறுதலிக்கும் போக்கிலே முன்வைக்கப்படுகின்றன. இதற்கெதிராகத்தான் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் இருந்து வருகின்றது. வடக்கிலே இருந்து முஸ்லிம்கள் இன ரீதியாகச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டார்கள் என்ற விடயமும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் பல இடங்களிலும் நிகழ்ந்தமையும் முஸ்லிம்களுக்கு தமிழ் ஏகாதிபத்தியத்தின் கீழ் எந்தவித நியாயமும் ஏற்படமாட்டாது என்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறு தமிழ்மக்கள் சிங்கள ஏகாதிபத்தியம் தமது உரிமைகளை நசுக்குகிறார்கள் என்று தமது வட.-கிழக்கு தாயகத்துக்கான சுயநிர்ணயத்துக்கு மக்கள் ஆணையைப் பெற்றார்களோ அதேபோல மாறிமாறி வந்த தேர்தல்களிலும் தமது உரிமைகளுக்கான ஆணையை வட.-கிழக்கு முஸ்லிம்கள் நிரூபித்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் சார்பில் சமாதானப் பேச்சுக்களில், இணைந்த வட.-கிழக்கு, தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் தாயகம் என்பது வலியுறுத்தப்படுகிறது. எவ்வாறு வட.-கிழக்கிலுள்ள தமிழர் தாயகம் பிரிக்கப்படமுடியாதோ வட.-கிழக்குப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களினதும் தாயகமும் பிரித்து ஆளப்படமுடியாது. இணைந்த வட.-கிழக்குக்குள் முஸ்லிம்களுக்கு ஒரு சுயாட்சி அலகே நிரந்தரத் தீர்வாக முடியும் என்பது எம்மால் உணரப்படுகிறது.

★ கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கு தமிழர்களதும் முஸ்லிம்களினதும் தாயகம் என்று தெளிவாகக் கூறியுள்ளனர். இந்த விடயத்தில் தங்களை சிறுபான்மை பெரும்பான்மை எனப் பிரித்து அவர்கள் பார்க்கவில்லை. தமிழர்களில் ஒன்றாகவே அவர்கள் பார்த்தார்கள். இந்த சுமுகமான சூழலை தங்களால் ஏன் ஏற்றுக்கொள்ள முடியாமற்போனது என்பதை கொஞ்சம் மனம் திறந்து கூறுவீர்களா?



● ஹக்கீம்: எவ்வாறு தமிழர்கள் சிங்கள மேலாதிக்கத்தின் கீழ் தாங்கள் வாழ்வதற்குத் தயாரில்லை என்று தமது சொந்த வாழ்விடங்களில் சுயாட்சி தேவையென்று இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாள் தொட்டு வலியுறுத்தி வந்தார்களோ அதே போலத்தான் வட.-கிழக்கு பூமியிலே தமிழ் மேலாதிக்கத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் வட.-கிழக்கு பூமியிலே தமிழ் மேலாதிக்கத்தின் கீழ் நாங்கள் வாழமுடியாது. எனவே, எங்களுடைய பிரதேசத்தில் எங்களுக்கு சுயாட்சி தரப்படவேண்டும் எனறு வலியுறுத்துகிறார்கள். எவ்வாறு முழு இலங்கைக்குள் தமிழர்கள் தமது சுயாட்சியை வலியுறுத்தினார்களோ அதே அடிப்படையில் முழு வட.-கிழக்குக்குள் முஸ்லிம்கள் தமது சுயாட்சியை வலியுறுத்துகிறார்கள். இதை மறுதலிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்காகத் தொடர்ந்து மக்கள் ஆணையை முஸ்லிம்கள் ஏகோபித்த அளவில் தமது அரசியல் இயக்கமான முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கி வந்துள்ளார்கள்.

★ கேள்வி: தமிழர்கள் தாயகத்தில் ஒரே தேசியக் கூட்டணியாக முஸ்லிம்களும் இணைந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தால் அது சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு பலமான எதிர்ப்பாக இருந்திருக்கும் இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

● ஹக்கீம்: நிச்சயமாக நாங்கள் வட.-கிழக்குப் பூமியிலே எங்களை ஒருதனித்துவமான இனமாகக் காட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காகவும் எங்கள் சுயநிர்ணயக் கோட்பாட்டை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும் நாங்கள் கிழக்கு மாகாணத்திலே, குறிப்பாக மூன்று மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடுகின்றோம். யாழ்ப்பாணத்திலே முஸ்லிம் காங்கிரஸ் தனியாகப் போட்டியிடுவது ஓர் அடையாளமாக - நடத்தப்பட்ட - அநியாயங்களை மீண்டும் ஒருமுறை நாங்கள் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் உலகுக்கு எடுத்துக்காட்டுவதன் நிலைப்பாட்டுடன்தான் - தனித்துப்போட்டியிடுகின்றோம். எனவே, இந்த அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்போது முஸ்லிம்களையும் தனித்தரப்பாகச் சேர்த்துக்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசும் சர்வதேச சமூகமும் தந்த உத்தரவாதம் அலட்சியப்படுத்தப்பட்டு மீறப்பட்டு வந்திருப்பது மீளவும் சரிசெய்யப்பட்டு, பேச்சு மேசையிலே நாங்கள் சரிசமமாக தமிழீழ விடுதலைப் புலிகளோடும் அரசோடும் உட்கார்ந்து எங்களுடைய மக்களுடைய வாழ்விடங்களிலே சுயாடசி அமையத்தக்கதான ஓர் இறுதித் தீர்வை நோக்கி நாங்கள் நகரவேண்டும் என்ற அடிப்படையிலேதான் தனித்துப் போட்டியிடும் முடிவை நாங்கள் எடுத்தோம்.

### இந்தியத் தலையீடு

★ கேள்வி: இலங்கையின் உள் விவகாரங்களிலே இந்தியாவின் தலையீடு, வர்த்தக முயற்சிகள், கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கை என்ற பெயரில் அதிகரித்து வருவதை அறியக் கூடியதாகவுள்ளது. இது தங்களுடைய பார்வையில் கவனத்தில் எவ்வாறு அமைகின்றது.?

● ஹக்கீம்: இரண்டு தனியான இறைமையுள்ள நாடுகளுக்கிடையில் நடைபெறுகின்ற பேச்சுகளின் பிரதிபலனாக இவ்வாறான கூட்டுப் பொருளாதார உடன்பாடுகளும் பாதுகாப்பு தொடர்பான உடன்பாடுகளும் சர்வ தேச சமூகத்திலே பல பிராந்தியங்களில் நடந்துவந்துள்ளன. தெற்காசியப் பிராந்தியத்தில் இந்திய வல்லரசின் மேலாண்மை தொடர்ந்தும் இலங்கைக்குள் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்திலே நேரடியாகத் தலையிடுகின்ற நிலைமையிருந்தது. இம்முறை அவ்வாறு நேரடியாகத் தலையிடாதுவிட்டாலும் அவர்கள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்துக்கான தீர்வு தங்களது உள்ளகக் கட்டமைப்பிலே சவால்களை ஏற்படுத்தி விடக்கூடாது என்பது தொடர்பான அச்சம் இந்தியாவின் தலையீட்டை இலங்கை இனப்பிரச்சினையில் ஏற்படுத்தி வந்திருக்கிறது.

இது ஒரு தவிர்க்கமுடியாத காரணியாக தொடர்ந்தும் இருந்து வரும் என்பதுதான் யதார்த்தம். எனவே. இதை எவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கையாளப்போகிறார்கள் என்பதும் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பக்குவமாக இந்த விடயத்தை அணுகுவதன் மூலம் ஒரு நிரந்தரமான தீர்வை சாத்தியமாக்க வேண்டுமேயொழிய நாங்கள் இந்தியாவின் மேலாதிக்கப்போக்கு என்று அதனைச் சாடுவதன் மூலம் இந்தப் பரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதுதான் நாங்கள் யதார்த்தமாகக் கண்டுள்ள உண்மை. எனவே, இலங்கை முஸ்லிம்கள் இவ்விடயத்தில் ஒரு நடுநிலையான போக்கைத் தான் கடைப்பிடித்துவந்துள்ளார்கள்.

★ கேள்வி: சர்வதேச நாடுகள அமைதி வழியில் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலையில் இருக்கும்போது ஜே.வி.பி. வடக்கு - கிழக்குக்கான அதிகாரப்பகிர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறுகிறதே இது குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

● ஹக்கீம்: ஜே.வி.பி. ஓர் இனவாதக்கட்சி என்பதில் யாருக்கும் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமிருக்க முடியாது. அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்ற நப்பாசையின் காரணமாக இன்று புதிய முகமூடியுடன் இந்த நாட்டிலே வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த ஜே.வி.பியுடனான கூட்டும் அதற்கு ஆதரவளிக்கின்ற முஸ்லிம் தரப்புகளும் தமிழ் விரோதப் போக்கை அடிப்படையாகக் கொண்டுதான் அந்தக்கூட்டு அமைப்புக்குள் தமது அரசியல் பிரசாரத்தை செய்து வருகின்றார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இப்படியான தமிழ் விரோதப் போக்கைக் கொண்ட அமைப்பு அல்ல என்பதற்காகத்தான் நாங்கள் எங்களை தூரப்படுத்தி அவர்களிடமிருந்து நாங்கள் விலகி நின்று எங்களைத் தனித்துவமாக அடையாளப்படுத்தி உள்ளோம். தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளுக்குக் குறுக்கே நின்று எங்கள் அரசியல் அபிலாஷைகளை அடைய நாம் விரும்பவில்லை. குறிப்பாக, முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு தமிழர்களுக்கு ஒன்றும் கிடைக்காவிட்டால் நாங்களும் ஒன்றும் கேட்கமாட்டோம் என்பது அல்ல என்ற விடயத்தை வலியுறுத்திக்கூற விரும்புகிறோம். தமிழர்களுக்கும் அவர்களுடைய தாயக பூமியிலே சுயாட்சி வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கப்படுகின்றபோது அந்த தாயகப் பூமிக்குள்ளே வாழுகின்ற இன்னுமொரு தனித்துவ அடையாளம் கொண்ட சகோதர இனமான முஸ்லிம்களும் தங்களுடைய சுயாட்சியை அனுபவிக்கத் தகுதியுடையவர்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேதான் நாங்கள் செயற்பட்டுவருகின்றோம். இந்த சிங்கள பேரினவாதக் கூட்டணியுடன் செயற்படுவோருக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

★ கேள்வி: தமிழர்களின் ஜனநாயக உரிமையை மறுக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தல் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்தரிகா குமாரதுங்க மறுத்துள்ளார். இது தமிழர்கள் ஜனநாயகத்தில் பங்கு பெறாத வகையில் பிரிந்து சென்று வாழ்வதையல்லவா ஊக்கப்படுத்துகிறது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

● ஹக்கீம்: ஜனாதிபதி சந்திரிகாவின் ஜனநாயக நடவடிக்கைகளிலே அவர் காட்டுகின்ற இரட்டை நிலைப்பாடு நாங்கள் தொடர்ந்தும் கண்டு வந்திருக்கின்ற விடயம். தமிழர்களுக்கு இந்தத் தேர்தலிலே சுதந்திரமாக வாக்களிக்கின்ற உரிமை தரப்பட்டாகவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம். அவர்கள் தங்கள் ஆணையை சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கு எந்தத் தடையும் போடப்படக்கூடாது என்றுதான் நாங்கள் விரும்புகின்றோம். இருந்தாலும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருக்கின்ற இவரும் சிங்கள மேலாதிக்கப் போக்கைக் கடைப்பிடிக்கின்ற நிர்வாகிகளும் இன்று தமிழ்மக்களுடைய ஜனநாயக உரிமைகளிலே தலையிடுவதை நாங்கள் கண்டிக்கின்றோம்.

### ஜனாதிபதியின் போக்கு

★ கேள்வி: ஜனாதிபதி பதவியில அமர்ந்த சந்திரிகா ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழித்துவிடப்போவதாக ஏற்கனவே கூறியிருந்தார். ஆனால், இப்பொழுது அவர் பிரதமர் கதிரையை அலங்கரித்துக் கொள்வதற்காக அந்த ஜனாதிபதி முறைமையை நீக்கப்போவதாகக் கூறிவருகிறார். இதைப் பொறுத்தவரையில் உங்கள் கருத்து என்ன?

● ஹக்கீம்: (சிரிக்கிறார்) ஜனாதிபதியின் சந்தர்ப்பவாத அரசியல் இன்று நேற்று ஆரம்பித்த விடயம் அல்ல. அவர் ஜனாதிபதி பதவியை 1999 இல் ஏற்றவுடன், உடனடியாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அவர் அகற்றத் தயாராக இருந்தால், இன்று பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நிலையில்தான் ஜனாதிபதியின் தீர்வுப் பொதிக்கு 2/3 பெரும்பான்மை பெற்றுத் தருவதாகக் கூறினார்.

அந்தவேளையில், தான் இரண்டாவது முறையும் ஜனாதிபதிப் பதவியை வகிப்பதற்கு மக்கள் ஆணை கிடைத்திருந்ததால் அந்தக் கதிரையில் ஆறு வருட காலம் இருந்து விட்டு, அதற்குப் பிறகு தனக்கு மீண்டும் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவது யாப்பின்படி இயலாத காரியம் என்பதை அடிப்படையாக வைத்து அவர் இந்த மாதிரியாக முன் பின் முரணாகப் பேசுகிறார். சுயநல அரசியலைத் தக்கவைத்துக் கொள்வதே அவரது நோக்கம் எனவே, இந்த நாடாளுமன்றக் கலைப்பின் மூலம் அவர் ஆடுகின்ற இந்த நாடகம் கபடத்தனமாக இந்த நாட்டு மக்களை கஷ்டத்துக்குள் மாட்டிவிடுவதற்கு தனது சொந்த சுயநலத்துக்காக - தனது சொந்த குடும்ப அரசியல் நலனுக்காக - அவர் முழு நாட்டையும் பொருளாதாரச் சீரழிவுக்குள்ளும் சமாதானப் பேச்சுக்களை சிக்கலாக்கும் முயற்சிக்குள்ளும் அவர் தள்ளியுள்ளார் என்றே நாங்கள் கூறி வந்திருக்கிறோம்.

எனவே, இது குறித்து சரியான ஆணையை முஸ்லிம் மக்கள் வழங்குவதன் மூலம் நாங்கள் தனித்துவமாக எதிர்காலப் பேச்சுக்களில் பங்கேற்கவும் அதேநேரம் எமது சுயாட்சியைக் கௌரவமாக - கண்ணியமாக பேச்சு மேசையில் பேசி எட்டுவதற்கும் சந்தர்ப்பம் தருவார்கள் என்று நம்புகிறோம்.

★ கேள்வி: தமிழர் தாயகத்தில் வாழவேண்டிய தமிழ் பேசும் முஸ்லிம்கள் தமிழர்களுடனும் தமிழர்கள் தமிழ்பேசும் முஸ்லிம்களுடனும் இணைந்து பலமான தாயகத் தன்மையை வெளிப்படுத்த நீங்கள் தெரிவிக்கும் ஆலோசனைகள் என்ன?

● ஹக்கீம்: தமிழர்களோடு இணக்கப்பாட்டுக்கு வருவதென்பது எங்களுடைய சுயநிர்ணய உரிமையை அவர்கள் அங்கீகரிப்பதற்கும் அதே நேரம் எமது வாழ்விடங்களிலே சுயாட்சியை ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஏனைய முஸ்லிம் தரப்புகளுக்கும் 1988 இல் இருந்து எடடப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் ஒரு நிரந்தரமான தீர்வு அமைவதற்கும் வழிகோல வேண்டும். ஆனால், வலுக்கட்டாயமாக முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தை மறுக்கின்ற விடுதலைப் புலிகள் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப வெவ்வேறு விடயங்களைச் சொல்லி வருவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் நாங்கள் பேச்சு நடத்துவது என்பது எமது மூலாதாரக் கோட்பாடுகளில்தான் தங்கியுள்ளது. எவ்வாறு அவர்கள் திம்புக் கோட்பாடுகளை வலியுறுத்தி அவற்றை ஏற்றுக்கொண்டால்தான் நாங்கள் பேச்சுக்கு வரமுடியும் என்பதை தமிழர் தரப்பு எடுத்து வந்ததோ அதேபோன்று எங்களுக்கும் வட.-கிழக்குக்குள் உள்ள சுயநிர்ணய உரிமையையும் எங்களுடைய வாழிடங்களுக்கான சுயாட்சி அதிகாரங்களையும் சரியாக வலியுறுத்தும் அந்தக் கோட்பாட்டு ரீதியான இணக்கப்பாட்டை ஏற்றுக்கொண்டால், ஏற்படுத்திக்கொண்டால், ஈற்றிலே பிரச்சினைக்கான தீர்வை பேச்சு மேசையில் காணமுடியும்.

**தொகுப்பு : டன்ஸ்ரன் லூயிஸ்**

★ கேள்வி: இறுதியாக ஒரு கேள்வி, இலங்கையின் இன முரண்பாட்டுக்கு சமாதான வழியில் தீர்வு ஏற்படும் என்று இன்றைய சூழலில் நம்புகிறீர்களா அமைச்சர் அவர்களே?

● ஹக்கீம்: இந்தத் தேர்தலுக்குப் பிறகு, இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் நாடாளுமன்றத்திலே அதிகார சமன்பாட்டிலே ஏற்படப் போகின்ற ஒரு பாரதூரமான மாற்றத்தின் காரணமாக இன்னும் சிக்கலடையப்போகின்றது என்றுதான் நாங்கள் நினைக்கின்றோம். இந்தச் சிக்கலான அரசியல் நிலைப்பாட்டுக்கு முழு நாட்டையும் கொண்டுபோய் தள்ளிய ஜனாதிபதி, அதற்குப் பிறகு வருகின்ற விளைவுகளுக்குப் பொறுப்பேற்று ஆகவேண்டும். எப்படியாயினும், 2005ஆம் ஆண்டு அண்மிக்கின்றபோது அவருக்கு அதற்கப்பால் நிறைவேற்று அதிகாரக் கதிரையில் இருந்துகொண்டு நாட்டை அதலபாதாளத்துக்கு இட்டுச் செல்வதும் கடினமாகிவிடும். என்றாலும், அடுத்த நாடாளுமன்றம் ஒரு தொங்கு நாடாளுமன்றமாக இருக்கப் போகின்றது. அந்தத் தொங்கு நாடாளுமன்றத்திலே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆசனங்கள் தீமானிக்கின்ற சக்தியுடைய ஆசனங்களாக இருக்கப்போகின்றன என்ற அடிப்படையிலேதான் நாங்கள் தேர்தல் வியூகங்களை வகுத்திருக்கின்றோம்.

அதே அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தீர்மானிக்கும் சக்திமிக்க ஆசனங்கள் கிடைக்கபபோகின்றன. அந்தச சந்தர்ப்பத்திலேயே எவ்வாறு நாங்கள் எமது பிரயோக அரசியல் மூலம் நன்மைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களுக்கு பெற்றுக்கொடுப்பது.

முரண்பாடுகள் இல்லாமல் ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது என்பதெல்லாம் பொறுப்புணர்ச்சியோடு இந்தச் சிக்கலான அரசியல் கட்டத்தை எதிர்நோக்கியுள்ள நாமெல்லாம் எவ்வாறு நடந்துகொள்ளப்போகின்றோம் என்பதைப் பொறுத்துத்தான் அமையப்போகின்றது. இதைப்பற்றி நாங்கள் மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். ✪

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 01 - 1926



மறைவு 21 - 03 - 2003

### அமரர் வ.த.வைத்திலிங்கம்

(V.T.V.)

நாள் எல்லாம் நாம் உயரப் பாடுபட்டாய்
ஐயா! சீரான வாழ்வுபெற வழிவகுத்தாய்!
பாசத்தின் முழு உருவே அன்பின் ஒளிவிளக்கே!
மனங்களில் மறையா மாணிக்கமே!
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

'சசிகிரி'
இராஜவீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
0777110118

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29380)(40-21-16-14)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 – 02 – 1925



மறைவு 10 – 03 – 1997

### அமரர் வல்லிபுரம் சிங்கராசா

திதி:09-03-2004

அன்பின் திருவுருவாய் பண்பின் இருப்பிடமாய்
பாரோர் போற்ற வாழ்ந்தீர்கள்!
நீண்டதோர் பிரிவைத் தந்தீர்கள்
மறக்கமுடியாது கலங்குகிறோம்.
ஆண்டுகள் ஏழு ஆனாலும் உங்கள்
இனிய முகம் மறக்கமுடியாது தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

197, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.


அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29411)(26-14-16-21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

பிறப்பு 13 - 07 - 1936



இறப்பு 08 - 02 - 2004

அமரர்

### பொன்னம்பலம் தில்லைநாதன் (புங்குடுதீவு)

மனிதரில் மாணிக்கமாய் மரந்தருள் திலகமாய் வாழ்ந்த நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் மட்டும் எங்கள் நெஞ்சைவிட்டு அகலவே அகலாது!

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து எமக்கு ஆறுதலும், தேறுதலும் கூறி அனுதாபந் தெரிவித்த அன்புள்ளங்கொண்டவர்களுக்கும் உற்றநேரத்தில் உறுதுணையாயிருந்து பலவழகளிலும் உதவிகள் செய்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் நாம் நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

14 1/1, பிரப்பங்குளம் றோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

\- குடும்பத்தினர்.

(29417)(34)

## வீடு புகுந்து பகலில் கொள்ளை

கோப்பாய்,மார்ச்9

கோப்பாய் மத்திப் பகுதியில் பகல வேளை வீடொன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்து 7 ஆயிரம் ரூபா பணத்தையும், வானொலிப் பெட்டியையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

வீட்டில் உள்ளோரை விசாரிக்குமதோரணையில் வந்தே இத்திருட்டை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-10-72)

## மதிப்பிடப்பட்டதை விட தேர்தல் செலவுகளுக்கு மேலதிக தொகை

கொழும்பு,மார்ச்9

எதிர்வரும் பொதுத் தேர்தல் நடவடிக்கைகளுக்குச் செலவிட நேரிடுமென மதிப்பிடப்பட்ட 60 கோடி ரூபாவுக்கு மேலதிகமாக இம்முறை செலவாகுமென தேர்தல் ஆணையாளா காரியாலயத்தைச் சேர்ந்த உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களைவிட இமமுறை தேர்தலில் பெரும் தொகையான கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் போட்டியிடுவதால் நீளத்தில் கூடிய வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளதும் வாக்குப்பெட்டிகளின் தேவை அதிகரித்திருப்பதுமே இதற்கான காரணமெனத் தெரிவித்துளளார் அந்த அதிகாரி. இவற்றுக்கும் மேலாக தேர்தல் கண்காணிப்பு உத்தியோகத்தர்களின் தொகையை அதிகரிக்கப் படவேண்டியிருப்பதும் இதற்கான ஒரு காரணமாகுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## தேவாலயம் புனரமைப்பு

குருநகர்,மார்ச்9

கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான குருநகர் புதுமை மாதா தேவாலயம் கட்டம் கட்டமாக இடிக்கப்பட்டுப் புதுப்பித்துக் கட்டப்படவுள்ளதாக குருநகர் புதுமை மாதா ஆலயப் பங்குச் சபை தெரிவித்துள்ளது.

பீடத்தையண்டிய தெற்குப்பகுதி முதற்கட்டமாக இடிக்கப்படவுள்ளது. ஆலயப் புனரமைப்புக்கெனப் பொது மக்களிடம் இருந்து திரட்டப்பட்ட 15 லட்சம் ரூபா கைவசம் உள்ளது எனவும் முற்றாகப் புனரமைப்புச் செய்வதற்கு 50 லட்சம் ரூபா தேவையெனவும் ஆலயப்பங்குச் சபை மேலும் தெரிவித்துள்ளது.(ம-10-51)

## குடி தண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை

கொழும்புத்துறை,மார்ச்9

கொழும்புத்துறையில் உள்ள இலந்தைக்குளம் வீதி மற்றும் வில்வம்தெரு ஆகியவற்றுக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இப்பகுதிகளில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக மக்கள் முறையிட்டதை அடுத்தே மேற்படி பணிகள் நடைபெற்று வருகின்றன. (ம-10-30)

## போக்குவரத்துக்கு இடையூறு

கோப்பாய்,மார்ச்9

கோப்பாய் - கைதடி வீதியின் இருமருங்கிலும் வளர்ந்துள்ள முள் மரங்களினால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் நடுகைசெய்யப்பட்ட மரங்களே இவ்வாறு வளர்ந்துபெரும் பற்றைகளாகக் காட்சியளிக்கின்றன.

இவை வீதியில் நீண்டு காணப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளன. (ம-10-72)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்9

இலங்கை ஆசிரியர்சேவையில் பதவியுயர்வுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான அமைச்சரவை முடிவு பற்றிய சுற்றறிக்கையின் குறைபாடுகள் பற்றி ஆராயவுள்ள கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் போட்டி இரண வீரகே கலந்துகொள்ளவுள்ளார்.

ஆசிரியர்களை இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் செயலாளர் ஏ.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (ம-10-6)


விரைவாகவும், துல்லியமாகவும்,
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
வெளிநாட்டு அழைப்பினை INTERNET மூலம் பெறுவதற்கு



திருமுருகன் கொம் நெற்
Communication Services & Computer systems
46, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
(Front of M.P.C.S)
T.P: 021 222 7310 Fax: 021 222 7310
E.mail: thirumurugan@edoramail.com


## ஆறாம் மாத நினைவஞ்சலி



செல்வி
**பாலசரஸ்வதி பாலசுப்பிரமணியம்**
(கமலினி)

மலர்வு: 08-10-1972
உதிர்வு: 09-09-2003

மாதம் ஆறு கடந்தாலும்
மாறாது உம் நினைவு
என்றும் உனது நினைவுடன்:
அப்பா, அம்மா,
அக்காமார், தம்பி.

55/7,சபாபதி ஒழுங்கை,
தலையாழி, கொக்குவில். (29423)

## கண்ணீர் அஞ்சலி

தமிழ் திருமுறை ஓதலில் தேர்ச்சிபெற்றவரும்,
எமது ஆலயத்தில் கும்பாபிஷேகம், மஹோற்சவம் போன்ற
கிரியைகளில் கலந்துகொண்டு பெருமைப்படுத்தியவரும்,
சிறந்த சிவாச்சார்ய பெருமகனுமாகிய அளவெட்டி
ஸ்ரீகும்பளாவளைப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு

### சிவஸ்ரீ இ.சோமசுந்தரக் குருக்கள்

(சுப்பையாக் குருக்கள்)


காலமாகியதை அறிந்து ஆழ்ந்த கவலையடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து, அவர் தம்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

கலாநிதி சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள்
(சர்வதேச இந்துமதகுருபீட ஆஸ்திரேலியப் பொறுப்பாளர், நிர்வாகஸ்தர் - "மொடேன் ஹிந்துக்கல்ச்சர் ஆர்ட் வோர்க்ஸ்" N.I.H.Dip.)
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் (பிரதமகுரு - சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன்தேவஸ்தானம்)

(சி-33958)
(26-21-14-19)

## ஓராண்டு சிரார்த்த தின நினைவலைகள்



### அமரர் கார்த்திகேசு சந்திரராசா

(S.L.A.S.)
(இணைப்பாளர், UNHCR,
முன்னாள் பிரதேச செயலர் - சங்கானை)

வையத்துள் 30-01-1939
தெய்வத்துள் 19-02-2003

கிருஷ்ணபட்ச திருதியை
09.03.2004

பெற்றோர் பெரிதுவக்கப் பெருமகனாய்
நற் சோதரனாக நாநிலத்தில் நால் பேராய்
கற்றோர் கனிகூருங் கல்விமானாய்
உற்றார் உறவினனாய் நண்பனுமாய்

கண்ணிறைந்த கணவனுமாய் மைத்துனனாய்
கண்மணிகள் தான் பெற்ற தந்தையுமாய்
பண்பான மாமனுமாய் அன்பாலே
திண்டாட வைத்ததோர் பேரனுமாய்

சொந்தங்கள் இத்தனையும் கொண்டிருந்த
இந்தச் சமூகத்தின் இனிய சேவகனே!
உந்தனுக்கு எங்களது கண்ணீர்க் காணிக்கை
அந்தோ ஓடியதோ ஓராண்டு தெய்வமாகி.

பறளாய் வீதி, சுழிபுரம்.

\- குடும்பத்தினர்.

(29422)(34-21-14-16)

# ஹெயிட்டியில் ஊர்வலத்தின் மீது துப்பாக்கிச் சூடு; 4 பேர் பலி!

## குழப்பநிலை தொடர்ந்து நீடிக்கிறது

போர்ட்-ஒவ்-பிரின்ஸ்,மார்ச்9

கரீபியன் தீவு நாடான ஹெய்ட்டியில் சர்ச்சைக்குரியவராக விளங்கிய ஜேன் பேட்ரண்ட் அரிஸ்டிட் ஜனாதிபதிப் பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறிய பின்னரும் அந் நாட்டில் அமைதி திரும்பவில்லை. வன்முறையும் குழப்பங்களும் தொடர்கின்றன.

கடந்த சனியன்று தலைநகர் போர்ட்-ஒவ்-பிரின்ஸில் ஊர்வலம் சென்றோர் மீது திடீரென நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் நால்வர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களுள் ஒருவர் ஸ்பெயின் நாட்டுப் பத்திரிகையாளர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிபர் பதவியிலிருந்து அரிஸ்டிட் விலகியதை வரவேற்கும் வகையில் அரிஸ்டிட் எதிர்ப்பாளர்கள் இந்த ஊர்வலத்தை நடத்தினர். அதில் சுமார் பத்தாயிரம் பேர் வரை பங்குபற்றினர்.

ஆரம்பத்தில் ஊர்வலம் குழப்பம் ஏதுமின்றி அமைதியாகவே நடந்தது. அரிஸ்டிட் பதவி விலகிய கையோடு ஹெய்ட்டித் தலைநகருக்குள் வந்திறங்கிய சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு அமெரிக்க, கனடா மற்றும் பிரான்ஸ் நாட்டுத் துருப்புக்களைக் கொண்ட சர்வதேசப்படை, ஹெய்ட்டியின் உள்ளூர் பொலஸாருடன் இணைந்து ஊர்வலத்துக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

ஊர்வலத்தில் சென்றோர் அங்கு அரிஸ்டிட்டின் படத்துடன் வீதிக்குக் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த பெரிய பதாகையை இழுத்து நிலத்தில் வீழ்த்தினர். பின்னர் அதை இழுத்துச சென்று ஜனாதிபதியின் மாளிகைககு முன்னால் போட்டுஎரித்தனர்.

அரிஸ்ட்டுக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சியை முன்னெடுத்த பிலிப்பை தோளில் சுமந்து கொண்டு ஆடிப்பாடி ஊர்வலக்காரர்கள் வீதிக்கு வந்த போது, கூட்டம் ஆரவாரித்துக் குதூகலித்தது.


அரிஸ்டிட் நீதி விசாரணைக்கு முன நிறுத்தப்படவேண்டும். மக்களினதும் உடைமைகளையும் நாட்டின் சொத்துக்களையும் நாசம் செய்ததற்காக அவரின் ஆள்களும் சட்டத்தின் முன நிறுத்தப்படவேண்டும் - என்று ஊர்வலத்தில் சென்றோர் கோரினர்.

தொடர்ந்து ஊர்வலம் தலை நகரின் மத்திய சதுக்கத்தை வந்தடைந்த சமயமே திடீரென ஊர்வலத்தில் சென ரோர்மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால், உயிரிழப்புகளும், படுகாயங்களும் ஏற்பட்டன.

அரிஸ்டிட்டுக்கு ஆதரவானவர்களே இத்தாக்குதலை நடத்தினர் எனக் கருதப்படுகின்றது.

இத்தாக்குதலை அடுத்து ஊர்வலம் பெருங்குழப்பத்தில் முடிந்தது. ஊர்வலத்தில் சென்றோர் நாலாபுறமும் சிதறி ஓடினர். எங்கும் ஒரே களேபரம்.



சூட்டுச் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்த ஒருவரின் சடலத்தைப் பார்வையிடும் ஹெயிட்டி மக்கள்

இதற்கிடையில் - இந்த ஊர்வலத்துக்குப் போட்டியாக - அரிஸ்டிட் மீண்டும் பதவிக்கு வரவேண்டும் என்பதை வலியுறுத்தி - அரிஸ்டிட் ஆதரவாளர்களும் நேற்றுமுன்தினம் தலைநகரில் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தத்திட்டமிட்டிருந்தனர். ஆனால், முதல் நாள் நடைபெற்ற எதிர்த்தரப்பின் ஊர்வலம் குழப்பத்தில் முடிந்ததால் தமது ஊர்வலத்தை அவர்கள் ஒத்திவைத்தனர்.

உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செயயப்படாமையாலேயே தாங்கள் ஊர்வலத்தை ஒத்திவைத்தனர் என்று அதன் ஏற்பாட்டாளரான அரிஸ்டிட் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

அரிஸ்டிட்டை பதவி கவிழ்க்கச் செய்பவர்களுக்கு மட்டும்தான் இங்குள்ள அமெரிக்கத் துருப்புக்கள் பாதுகாப்புத் தருகின்றன. அரிஸ்டிட் ஆதரவாளர்களான எங்களுக்கு அல்ல - என்று அவர்களுள ஒருவர் தெரிவித்தார்.

ஹெய்ட்டியில் மீண்டும் பெருங் குழப்பம் ஒன்று எந்நேரமும் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# அமெ.படைகளின் தலைமையகம் மீது ஈராக்கில் தாக்குதல்!

பக்தாத்,மார்ச்9

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மையப்பகுதியில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளின் தலைமையகம் அமைந்திருக்கும் ரஷீட் ஹோட்டல் நேற்றுமுன்தினம் இரவு பலத்த றொக்கட் மற்றும் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது.

பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்ததையும் தீப்பிளம்பு கிளம்பியதையும் கேட்கவும் பார்க்கவும் கூடியதாக இருந்தது என சர்வதேச செய்தியாளர்கள் தெரிவிததிருக்கின்றனர்.

தீப்பிளம்புகள் வானளாவ எழுந்ததைக் காணக்கூடியதாக இருந்ததாகவும், குண்டு வெடிப்புக்களை அடுத்து விடாது சைரன்ஸ் ஒலித்ததைக் கேட்கக் கூடியதாக இருந்தது எனவும் பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

ஐந்து றொக்கட்டுக்களும் பல கிரனேட்டுக்கள் மற்றும் ஷெல்களும் அமெரிக்க உயரதிகாரிகள் தங்கியிருக்கும் அந்த ஹோட்டலைத் தாக்கின என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை என அமெரிக்கா தலைமையிலான கூட்டு ஆக்கிரமிப்புப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இரவில் எங்கிருந்து இத்தாக்குதல் நடக்கின்றது என்பதைத் துல்லியமாக அடையாளம் காணும் முயற்சியாக அருகிலுள்ள டைகிரிஸ் நதிக்கு மேலாக பல அமெரிக்க யுத்த விமானங்கள் தாழ்வாகப் பறந்த வண்ணம் இருந்தன. வெப்ப உணர்வுக் கருவிகள் மூலம் தாக்குதல் நடத்துவோரின் இடத்தை கண்டு பிடிக்க அந்த விமானங்கள் முயன்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ஆக்கிரமிப்புப் படைகளின தலைமையகம் அமைந்துள்ள பிரதேசம் 'பச்சை வலயம்' என அறிவிக்கப்பட்டு அங்கு பொதுமக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இத்தகைய தாக்குதல்கள் அவ்வப்போது தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இத்தலைமையகத்துக்கு பக்கத்தில் உள்ள கட்டடத்தில்தான் அமெரிக்கத் தரப்பு உருவாக்கிய ஈராக்கிய ஆட்சிச் சபையின் 25 உறுப்பினர்களும், ஈராக்குக்கான இடைக்கால அரசமைப்பில் ஒப்பமிடுவதற்காக நேற்றுக் கூடவிருந்தனர்.

அதற்கு முதல்நாள் இரவு நடத்தப்பட்ட மேற்படி தாக்குதல்களுக்கு இந்தக் கட்டடமும் இலக்கானது.

இந்த ஒப்பந்தம் கடந்த வெள்ளியன்று கைச்சாத்திடப்படவிருந்தது. ஆனால், உத்தேச ஒப்பந்தத்தில் ஷியா முஸ்லிம்களுக்கு உரிய உரிமைகளும் பங்கும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து ஷியா பிரதி நிதிகள் அடம் பிடித்ததால் அந்நிகழ்வு நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் தற்போது மாற்றம் ஏதுமின்றி அந்த அரசமைப்பை நாளை ஏற்க ஷியா முஸ்லிம்கள் இணங்கியுள்ளனர்.



வெடிக்கத்தவறிய ரொக்கெட் ஒன்றை சோதனையிடும் அமெ.படையினர்.

# இஸ்ரேலின் தாக்குதலில் 14 பலஸ்தீனர்கள் பலி!

## மாண்டவர்களில் மூவர் சிறுவர்; மேலும் ஐம்பது பேர் காயம்!



காயமடைந்த ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.

ஜெருசலேம்,மார்ச்9

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியிலுள்ள இரு அகதிமுகாம்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் ஞாயிற்றுக்கிழமை காலையில் நடத்திய தாக்குதலில் 8 வயதுச் சிறுவன் உட்பட 14 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்; 50 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை பலஸ்தீனத்தின் மூத்த அமைச்சர் சாயிப் ஈராகத் கண்டித்துள்ளார்.

இத்தாக்குதலுக்காக இஸ்ரேல் தகுந்த விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்களான ஹமாஸ், இஸ்லாமிய ஜிகாத், ஃபடா ஆகியவை எரேஸ்பகுதியில் சனிக்கிழமை கார்க்குண்டு மூலம் தற்கொலைத்தாக்குதலை நடத்தின.

அதற்குப் பழிவாங்கும் வகையில் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலிய இராணுவம் இந்தத்தாக்குதலை நடத்தியிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணியளவில் (இலங்கை நேரம் காலை 6.00) இஸ்ரேலிய இராணுவத்தின் கவச வாகனங்கள் சாரை சாரையாக காஸாப் பகுதிக்குள் நுழைந்தன.

அவற்றுக்குப் பாதுகாப்பாகக் குண்டு வீச்சு ஹெலிகொப்டர்கள் சென்றன. அங்குள்ள முகாம்களில் ஹமாஸ தீவிரவாதிகள் ஒளிந்திருக்கின்றனர் என்று கூறி, அவற்றின் மீது இஸ்ரேலிய இராணுவம் கடுமையாகத் தாக்குதலை நடத்தியது.

அதில் 8 வயதுச் சிறுவன் மற்றும இரு சிறுவர்கள், ஹமாஸ் தீவிரவாதிகள் என்று கூறப்படும் இருவர் மேலும் இரு தீவிரவாததிகள் உட்பட மொத்தம் 14 பேர் மாண்டனர்.

மேற்குக்கரையில் உள்ள கெனின் அருகே வெடிப் பொருள்கள் தயாரிக கப்பட்டு வருவதாகக் கூறி ஒரு கட்டடத்தின் மீது இஸ்ரேலிய இராணுவம் குண்டு வீசி, அதைத் தரை மட்டமாக்கியது.

### 10 ஆண்டுகள் குளிக்காத நபருக்குக் கட்டாயக் குளியல்

கடந்த பத்து ஆண்டுகளாகக் குளிககாமல் திரிந்த நபரிடமிருந்து துர்நாற்றம் வீசியதால் ஊர் மக்கள் அவரைக் கட்டிப்போட்டுக் குளிப்பாட்டினர். இந்தச் சம்பவம் கென்யா நாட்டில் இடம்பெற்றுள்ளது.

ஆபிரிக்க நாடான கென்யாவின் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 52 வயதான நபர் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக குளிக்காமல் சுற்றிவந்தார். இவருக்குத் திருமணமாகவில்லை.

இந்த வயதான மனிதரின் உடலில் நாளுக்குநாள் அழுக்குச் சேர்ந்து கொண்டே வந்தது. வீடே நாற்றமடிக்கும் அளவுக்கு இந்த நபரிடமிருந்து துர்நாற்றம் வீசியதால் ஊர் மக்கள் ஒன்று கூடி அவரைக் கட்டிப்போட்டனர். பொது இடத்தில் அவரை வைத்து நான்கு மணி நேரம் குளிப்பாட்டினர், ஏராளமான அழுக்குக் கரைந்து போனதால் அவரது எடையும் குறைந்துள்ளது. தற்போது அவருக்கு பெண் கொடுக்க பலர் முன்வந்துள்ளனராம்.

# நிருபர் உட்பட நால்வர் ஹெலி விபத்தில் பலி!

ஜப்பானில் நாகிசோ நகரில் தொலைக்காட்சி நிருபர் உள்ளிட்டோர் சென்ற ஹெலிகொப்டர் ஒன்று விபத்தில் சிக்கி வெடித்துச் சிதறியது. அதில் அந்த நிருபர், கமராமேன், மெககானிக் மற்றும் ஹெலிகொப்டர் விமானி ஆகியோர் பலியானார்கள். ஜப்பான் பொலஸார் ஞாயிற்றுக்கிழமை இத் தகவலைத் தெரிவித்தனர்.

நாகிசோவில் நடந்த சாலை விபத்துக் குறித்து செய்தி சேகரிக்க ஜப்பானின் ஷிஎேத்சு தொலைக்காட்சி நிறுவனம் தனது நிருபரையும் கமெராமேனையும் ஹெலிகொப்டரில் அனுப்பியது. அந்த ஹெலிகொப்டர் இறங்கும்போது மின்கம்பியில் மோதி வெடித்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். அதில் இருந்த 4 பேரும் விபத்தில் பலியானார்கள்.

# கிறீஸ் நாட்டில் ஆட்சி மாற்றம்! சோஷலிஸ்ட்டுக்கள் தேர்தலில் தோல்வி!!

ஏதென்ஸ்,மார்ச்9

அடுத்த ஓகஸ்டில் உலகப் பிரசித்திபெற்ற ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்களை நடத்தவிருக்கும் கிறீஸில் இதுவரை ஒரு தசாப்தகாலத்திற்கு மேல் ஆட்சியிலிருந்த சோஷலிஸ்ட்டுகள் ஆட்சியை இழந்தனர்.

பழைமைவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

அங்கு நடந்த பொதுத் தேர்தலில் கொஸ்டாஸ் கரமன்ஸிஸ் தலைமையிலான புதிய ஜனநாயகக் கட்சி முந்நூறு உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சி அமைக்கும் வாய்ப்பை பெற்றிருக்கின்றது.

சோஷலிஸ்ட் கட்சியின் பிரதமராக இருந்துவரும் பப்பண்டிரோ தோல்வியை ஏற்றுக்கொண்டார். தமது அரசு கடைசிக் காலங்களில் சில தவறுகளை இழைத்துவிட்டது என்று அவா ஒப்புக் கொண்டார்.

புதிய பிரதமராகப் பதவியேற்கப போகும் கரமன்ஸிஸ் அமெரிக்காவில கல்வி பயின்றவர், அந்த நாட்டில் மிக வயதில் குறைந்த முதல் பிரதமர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய கிறீஸைத்தாம் கட்டியெழுபபபோகின்றார் என்றும், கிறீஸ் தனது புதிய முகத்தை இந்த ஒலிம்பிக்கின் போது வெளிப்படுத்தும் என்று - அவர் அறிவித்திருக்கிறார்.

# நீங்கள் தோல் நோய்களினால் அவதியுறுகின்றீர்களா? உங்கள் முகங்களில் வடுக்கள் தோன்றியுள்ளனவா?

## சிகிச்சை முறையை மருத்துவக் கண்காட்சியில் அறியுங்கள்

மக்களின் மருத்துவ ரீதியிலான அறிவை மேம்படுத்த மருத்துவ மாண வர்கள் தமது கஷ்டங்களையும் பாராது மேலும் ஒருநாளைக் கூடுதலாக ஒதுக்கியுள்ளனர்.

ஆம்..... மக்களினதும், மாணவர் களினதும் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். பல்கலைக் கழகத்தில் இன்றுடன் முடிவுற இருந்த மருத்துவக் கண் காட்சி நாளைவரை நீடிக்கப்பட்டுள் ளது.

இதுவரை கண்காட்சிக்குச் செல்ல நேரம் இல்லை என்று இருந்தவர் களுக்கு இது ஓர் அரிய வாய்ப்புத் தான். எனவே, இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாமல் கண்காட்சியைக் கண்டு பயன்பெறவேண்டிய கடமை உங்கள் அனைவருக்கும் உண்டு. உடனே யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீடத்திற்கு விரையுங்கள்.

### தோல்

உடலின் மிகமுக்கியமான பகுதி யாகத் தோல் அமைந்துள்ளது. இதில பல்வேறு வகையான நோய்கள் ஏற் படுகின்றன. இவைபற்றிப் பூரணமாக விளக்குவதற்கென யாழ். பல்கலைக கழகத்தில் நடைபெறும் மருத்துவக் கண்காட்சியில் தோல் என்ற பிரதான பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதில் பின்வரும் உபபிரிவுகள் அடங்குகின்றன.

- தோலின் அறிமுகம்
- தோலின் பெறுமதிகள்
- தொற்றுநோய் அல்லாத நோய்கள் (Non infective disease)
- தோல் தொற்று (Parasitic skin infestation)
- வைரஸ் தோல் தொற்றுகள்
- பக்ரீரியா தோல் தொற்றுகள்
- பங்கஸ் தோல் தொற்றுகள்

ஏனையவை.

தோலின் அறிமுகம் என்னும் உப தலைப்பின் கீழ் தோலின் தொழிற் பாடுகள், தோல் நோய்களினால் ஏற் படும் பாதிப்புகள், தோலில் அமைந் துள்ள வாங்கிகள், தோலின் வெப்ப சீராக்கல் பொறிமுறை என்பன தொடர் பாக பூரண விளக்கம் வழங்கப்படுகின றது. அத்துடன் படங்கள் மூலமாக வும் இவை காட்டப்படுகின்றன.

தோலின் பெறுமதிகள் என்னும் உப தலைப்பின் கீழ் நெய் சுரப்பி என்றால என்ன?, முகப்பரு ஏன் ஏற் படுகின்றது?, முகப்பருவின் வகைகள், முகப்பரு எவ்வாறு உருவாகிறது?, முகப்பருவினால் உருவாகும் வடுக் களைத் தவிர்ப்பது எவ்வாறு, மயிரின் அமைப்பு, மயிரின் வளர்ச்சி, மயிர் நிறுத்தித் தசையின் அறிமுகம், மயிர் உதிர்வதற்கான காரணங்கள் என் பன தொடர்பாக விரிவான விளக்கம் வழங்கப்படுகின்றது.

தொற்றுநோய்கள் அல்லாத நோய் கள் என்பதன் கீழ் 'எக்சிமா'வின் அறிமுகம், அது வருவதற்கான கார ணங்கள், அறிகுறிகள், எக்சிமாவைத் தூண்டும் காரணிகள், 'பிசோரியாசீஸ் என்றால் என்ன என்பன தொடர்பாக அறிந்துகொள்ள முடியும்.

தோல் தொற்று என்பதன் கீழ், சிரங்கு என்றால் என்ன?, அது தொற் றும் வழிகள் எவை?, அதற்கான சிகிச்சை முறைகள் என்பன தொடர் பான அறிவைப் பெறலாம்.

வைரஸ் தோல் தொற்றுக்கள் என்பதன் கீழ் பாலுண்ணியின் அறி முகம், அதன் வகைகள், பாலுண் ணிக்கான சிகிச்சைகள் என்ன? என் பன தொடர்பாக பூரண விளக்கத் தைப் பெறமுடியும்.

பற்றீரியா தோல் தொற்றுகள் என்ற தலைப்பின் கீழ் தொழுநோயின் அறி முகம், அதன் அறிகுறிகள், தொழு நோயால் வரும் அங்கவீனங்களைத் தவிர்ப்பது எவ்வாறு? தொழு நோய்க் கான ஆரம்ப சிகிச்சை, அங்க வீனங்களை உடைய தொழு நோயா ளர்கள் தமது நாளாந்த வாழ் வைத் தொடர்வதற்கான சிகிச்சை என் பவை தொடர்பாக விரிவான விளக் கங்கள் வழங்கப்படுகின்றன.

பங்கஸ் தோல தொற்று என்பதன கீழ் பங்கஸ் தோல் தொற்று என்றால என்ன? அதற்கான அறிகுறிகள் என்ன? இதனைத் தடுப்பது எவ்வாறு என்பன தொடர்பாக பூரண விளக் கத்தைப் பெறலாம்.

### சட்டமருத்துவத்துறை

இதன் கீழ் 19 பிரிவுகள் உள் ளன.

- சட்ட மருத்துவ அறிமுகம்
- சட்டரீதியான காயங்கள்
- வீதி விபத்துக்கள்
- மனிதப் படுகொலைகள்
- வீடுகளில் நிகழும் வன்முறைகள்
- சித்திரவதை
- சூட்டுக்காயங்கள்
- மூச்சுத்திணறல்
- பாலியல் வன்முறைகள்
- சட்ட விரோத கருக்கலைப்பு
- சிறுவர் துஷ்பிரயோகம்
- சிசுக்கொலை
- புதைகுழிகள் தோண்டுதல்
- நஞ்சூட்டல், போதை மருந் துப்பாவனை
- மதுப்பாவனை
- பிரேத பரிசோதனை
- மருத்துவப் புறக்கணிப்பு
- அடையாளம் காணல்
- சட்டமருத்துவ உளவியல்

சட்டமருத்துவம் என்ற தலைப் பின்கீழ் சட்டமருத்துவம் என்றால் என்ன? இதனால் என்ன பயன் என் பன தொடர்பாக அறியமுடியும்.

சட்டரீதியான காயங்கள் என்ப தன் கீழ் சட்டரீதியான காயங்கள் என்றால் என்ன? அவை எந்தெந்த வகையில் உள்ளன என்பன தொடர் பான விளக்கங்கள் வழங்கப்படுவ துடன் படங்களும் காண்பிக்கப்படு கின்றன.

'வீதி விபத்துக்கள் என்ற தலைப பின்கீழ் விபத்து ஏற்படும் முறைகள், விபத்துக்களினால் ஏற்படும் காயங் கள், அதனைத் தடுப்பதற்கான முறை கள் என்பன தொடர்பாக அறிய லாம்.

வீடுகளில் நிகழும் வன்முறைகள், சித்திரவதைகள் என்ற தலைப்பு களின் கீழ் இவை எவ்வாறு ஏற்படு கின்றன? இவற்றினால் ஏற்படும் பாதிப்புக்கள், இவற்றைத் தடுப்பது எப்படி என்பன தொடர்பாகப் பூரண விளக்கத்தைப் பெறமுடியும்.

சூட்டுக்காயங்கள், மூச்சுத் திணறல் என்ற தலைப்புகளின் கீழ் இவை ஏன் ஏற்படுகின்றன, இவற்றுக்கான கிசிக்சை முறைகள் என்ன என்பது தொடர்பாக அறிந்துகொள்ள முடியும்.

பாலியல் வன்முறைகள், சட்ட விரோத கருக்கலைப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், சிசுக்கொலை ஆகிய பிரிவுகளில் இவை ஏன் ஏற்படுகின் றன, இவற்றுக்கான அடிப்படைக் காரணிகள் என்ன? இவற்றைத் தடுப் பதற்கான வழிமுறைகள் என்ன? என்பன தொடர்பாக முழுமையான விளக்கங்களைப் பெறலாம்.'

புதைகுழிகளைத் தோண்டுதல் என்ற தலைப்பில் அவை ஏன் மீள வும் தோண்டப்படுகின்றன? இவற் றின் மூலம் என்ன பயன் என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்படு கின்றது.

'நஞ்சூட்டல், போதை மருத்துப் பாவனை, மதுப்பாவனை ஆகிய தலைப்புகளின் கீழ் இவற்றினால் எவ்வாறு மரணங்கள் ஏற்படுகின் றன? மரணத்திற்கான காரணம் என்ன? என்பன தொடர்பாக விளக்கத்தைப் பெறலாம்.'

'பிரேத பரிசோதனை, மருத்துவப் புறக்கணிப்பு, அடையாளம் காணல், சட்டமருத்துவ உளவியல் என்ற தலைப்புக்களின் கீழ் இவற்றின் அறி முகம், பிரேத பரிசோதனை ஏன் மேற் கொள்ளப்படுகின்றது? மருத்துவப் புறக்கணிப்பு என்றால் என்ன? அடை யாளம் காண்பது எவ்வாறு? சட்ட மருத்துவ உளவியல் என்றால் என்ன என்பன தொடர்பான விரிவான விளக் கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ★

தொகுப்பு:
தேவா

யாழ். பல்கலை. மருத்துவபீடத்தின்
வெள்ளிவிழாவையொட்டி
மாபெரும் மருத்துவக் கண்காட்சி
5முதல் 10ஆம் திகதி வரை
ஊடக அனுசரணை:- உதயன்

## தவக்காலச் சிந்தனை

### 'நான்' என்ற எண்ணம் அகலவேண்டும்

**உங்களுள் பெரியவர் உங்களுக்கு தொண்டராக இருக்கவேண்டும். (மத். 23:11)**

பன்னிரண்டாம் நாள்

சமூகத்தில் வாழவும் வளரவும் தாகம்கொள்ளும் மனிதன் தன் வளர்ச்சி யின் பருவத்திற்கும் வாழும் சூழலுக்கும் அமைய தன்நிலையை உறுதிப் படுத்த விரும்புகின்றான். நான் என்ற நிலையை அடித்துக்கூறும் இடத்து அதிகாரத்தொனி மேலோங்கி அகங்காரம் தலைதூக்குகிறது. உறவுகளில் நானா? நீயா? என்ற இழுபறியும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வகுப்பு வாதங்களும் நாளாந்த வாய்ப்பாடுகள் ஆகின்றன. குரு - சீடர் உறவில் தம் சீடர்களை உருவாக்கிய யேசு தன்னைத் தாழ்த்தி தம் சீடர்களின் காலடிகளைக் கழுவுகிறார். அதிகாரச் செருக்கு கிறிஸ்து வின் சீடருக்கு அழகல்ல. அதனால், பெரியவர் தொண்டராகட்டும் என்ற தத்துவத்தை புகட்டுகிறார் யேசு என்னும் ஆசான். நான் என்ற எண்ணம் மடியவேண்டும். அப்போது உண்மையான பணி வாழ்வு பிறக்கும். எளிமையான உறவாடலில் நிறைவான மகிழ்வு உண்டு. உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை சிதறடித்து வலியோரை அரியணையினின்று தூக்கியெறிந்து தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துபவர் இறைவன்.

- சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

ஸ்கிறிப்ற் நெற் இன்



திரைக்கதை உருவாக்கம்,
திரைப்பட இயக்க கற்கை
நெறியின் பயிலுநரும்
தாயகத்
திரைப்படத்துறையின்
முன்னோடிகளில்
ஒருவருமான
ந.கேசவராஜன்
அவர்களின் எழுத்துரு
இயக்கத்தில் படைக்கப்பட்டு நிதர்சன
வெளியீடாக வெளிவந்துள்ள

அம்மா நலமா.........

முழுநீளத்திரைப்படம் வெற்றிபெறவும்,
அவரது திரைப்படங்கள் சர்வதேசம்
எங்கும் சென்றடையவும்
எமது வாழ்த்துக்கள்.

SCRIPTNET CHARITY
REEL PEACE PROJECT

(34-21-19-18) (29435)

ஸ்கிறிப் நெற்

சமாதானச் சுருள்

மாபெரும்
சிங்கள - தமிழ் குறுந்திரைப்பட விழா

காலத்தின் பதிவாகி ஈழத்துத் திரைப்படத் துறையின்
திருப்புமுனையாக வெளிவருகின்றது

மார்ச் 11 - வவுனியா (றோயல் திரையரங்கு)
மார்ச் 12 - நெல்லியடி (மகாத்மா திரையரங்கு)
மார்ச் 14 - யாழ்ப்பாணம் (கைலாசபதி கலையரங்கு)
மார்ச் 15 - கொழும்பு (பிரிட்டிஷ் கவுன்ஸில்)
மார்ச் 20 - கொழும்பு (தமிழ்ச் சங்கம்)

Reel Peace Short films Made in Partnership with

programme for creative content
UNESCO
HIVOS
BRITISH COUNCIL
Commonwealth Media Development Fund

For
SCRIPTNET CHARITY
REEL PEACE PROJECT

சுவீஸ் பிரஷன்ஸ் வீடியோ
நவாலி கிழக்கு, நவாலி.

மூர்த்தி கலர் லாப்
பிரதான வீதி,
மானிப்பாய்.

அபிநஜா மல்ரி எலக்ரோனிக்ஸ்
யாழ். வீதி, மானிப்பாய்.

ஆரணி ஓட்டோஸ் ஸ்பெயார்ஸ்
242, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

டிஜிற்றல் மீடியா நெற்வேக்
ரெம்பிள் றோட்,
நல்லூர்.

# சின்னத் திரைக்கு மக்கள் அடிமையாவதால் விபரீத விளைவுகள் ஏற்படப்போகின்றன!

## புதுவை இரத்தினதுரை எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்,9

தற்போது எம்மக்கள் சின்னத் திரைக்கு அடிமையாகி வருகின்றனர். இதனால், எமது சமூகத்தில் விபரீத விளைவுகள் ஏற்படப்போகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

கடந்த சனிக்கிழமை நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற 'துளிகள்' இறுவட்டு அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தமிழிசை வாழ்கின்ற தமிழீழம் அடங்கலாக இன்று இசையானது புதிய பரிணாமத்தைப் பெற்று வருகிறது. அது தனது இசைப்பயணத்தின் கால்களை அகலப்போட்டு வித்தியாசமான பாதையில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியது.

இசைக்கும் எமக்கும் நீண்டதொரு பாரம்பரியம் உண்டு. எல்லாக்கணப் பொழுதுகளிலும் ஏதோ ஓர் இசை இடையறுந்துபோகாமல் கேட்டுக் கொண டேயிருக்கிறது. அது அவலமாக இருந தாலும் ஆனந்தமாக இருந்தாலும எமது காதுகளில் விழுந்துகொண்டே இருக் கிறது.

இந்த இசையார்வலர்கள் குறைந் துவிட்டனர். இதற்குக் காரணம் சின னத் திரைதான். பாம்பு கடித்தால கூட எழுந்திருக்காத மயக்க நிலைக்கு யாழ. சமூகம் தள்ளப்பட்டு விட்டது இசையால, எழுத்தால் வாழ்ந்த இடம், கலை நிகழ்வுகளுக்கு ஆயிரக் கணக்கில் கூடிய சனம் இன்று எங்கே போய்விட்டது? எமது கலைஞர்களுக்கு எதுவுமே செய்ய முடியாமற்போகும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இதன் விளைவை மிகவிரைவில் சந்திப்போம். துளிகள் குறுவட்டில் காணப்படுகின்ற சமாதானப் பாடல் பாராட்டுக்குரியது. ஆனால், இம்மண் ணில் இன்னும் சமாதானம் வரவில்லை. இது ஒரு போர் ஓய்வு மட்டுமே. என்றார் அவர். (ஒ-4-49)

---

### கண்ணீர் அஞ்சலி

*அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான*

*எமது சக ஊழியர்*

**இரத்தினம் சிவம்**

அவர்கள் 07.03.2004 அன்று இயற்கையெய்தியதையிட்டு துயரமடைகின்றோம். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்துக்கொள்வதுடன் அவரது பிரிவால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் மனைவி, மக்கள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(29452)(37-11-12-36)

யாழ்.பல்கலைக்கழக சுகாதார நிலைய வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள்.

---

### துயர் பகிர்கின்றோம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் லிகிதரும், புலோப்பளை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரியுமான **திரு.இராசையா செல்வநாதன்** அவர்களின் பாசமிகு மாமனார்

**சுப்பையா அப்புத்துரை**

அவர்கள் 03.03.2004 அன்று இயற்கையெய்தியதையிட்டு மிகுந்த துயரமடைவதோடு பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.


*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,*
*பளை.*(29456)(11-12-36)

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கம்.

---

### கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 29 - 06 - 1953



விண்ணில் 07 - 03 - 2004

**அமரர் இரத்தினம் சிவம்**

**அன்னாரை இழந்து தவிக்கும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.**

***அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.***

பல்கலைக்கழக நிர்வாகக் கிளை சக ஊழியர்கள்.

(29459) (40-36-11-12)

---

### அவசரக் கலந்துரையாடல்

நல்லூர் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் அவசரக் கலந்துரையாடல் நாளை (10.03.2004) புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ. யோகராஜா கேட்டுள்ளார்.

(29457) (12-11) - தலைவர்.

---


### விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு (0602126... தொடர்இலக்கம் கொண்டது), DVD PLAYAR ஒன்றும் விற்பனைக்குண்டு. (TOSHIBA, MADE IN JAPAN)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இல. 30, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

தொ.பே. இல. - 0777 177261

### ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, சோனியா அகர்வால், நாசர் நடிப்பில்

கோவில் (ரீல்ஸ்)

காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (ம.ப.)

(C-33519) (12)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல் ரஜனி, ஸ்ரீபிரியா நடித்த

பில்லா (ரீல்ஸ்)

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பநே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு BLOOD SPORT - 2 கராட்டிப் படம்

(C/33515) (12)

### லிபேட்டி அச்சுவேலி

பார்த்திபன், விக்கினேஸ், விஜலக்ஸ்மி, செந்தில் நடித்த

ஜூரி (ரீல்ஸ்)

காட்சிநேரம்: 3.00, 7.00 (புநே.)

(C-33521)

### நாகம்ஸ் சுன்னாகம்

டொல்பி ஒலிநாதத்துடன் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

சரத்குமார், லைலா, வடிவேலு நடித்த



தம்பிரம்

(C/33520) (12)

தினசரி காட்சிகள் 11.00, 3.00, 7.00, 10.00 (புநே.)


---

### மரண அறிவித்தல்கள்

**தில்லையம்பலம் அருமைநாயகம்**

**(இளைப்பாறிய பிரதி நில அளவையாளர் நாயகம்)**

தெல்லிப்பழை, வேதவனம் வளவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தி.அருமைநாயகம் நேற்று (08.03.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*23, சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.*
***T.P: 0776153632*** (C/33970)(40-11-12-36)

தகவல்: திருமதி இ.செல்வநாயகி (மகள்).

**திருமதி தம்பு தங்கம்மா**

கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட தங்கம்மா தம்பு அவர்கள் நேற்று (08.03.2004) திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் தம்பு (உத்தரவுபெற்ற நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப் பிள்ளை - ஆச்சிப்பிள்ளையின் மகளும் நடராஜா, கனகம்மாவின் அன்புச் சகோதரியும் பஞ்சாட்சரம் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), செல்வராசா (U.S.A. - ஆளணி முகாமையாளர் - மஸ்கின்ஸ் கம்பனி), செல்வராணி (U.K.), தேவராசா (உத்தரவுபெற்ற நில அளவையாளர்- Canada), வசந்தாதேவி (Colombo), இந்திராணி (இளைப்பாறிய மாவட்ட கூட்டுறவு பரிசோதகர்), ஆனந்தராசா (Maharaja Ltd- Colombo), இரவீந்திரராஜா (New Tharanki Communication, Thirunelvely) ஆகியோரின் தாயாரும், சறோஜினிதேவி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற E.K. சண்முகநாதன் (இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர்), பாலேஸ்வரி (இளைப்பாறிய விரிவுரையாளர்-U.S.A.), சுகுணதீரன் (இளைப்பாறிய கணக்காளர் கல்வித்திணைக்களம்-Colombo), காலஞ்சென்ற கதிரவேலு (இளைப்பாறிய அதிபர்), அனுசியா, யோகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், ரஞ்சினி, ரோகினி, சுப்பிரமணியம், சுபாசினி, மைதிலி, தயாபரன், மகிலா, சண்முகேந்திரன், செல்லேந்திரன், சிலேந்திரன், சுபோதினி, துஷியந்தினி, தனஞ்செயன், சுமங்கலி, சயந்தன், மகிர்தன், ஆரூரன், அபிராமி, அருணன், டர்சினி, டாருணி, தரங்கினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2004) செவ்வாய்க் கிழமை 4 மணியளவில் (மாலை) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*'அம்பிகோட்டம்'*
*டச்சுவீதி, கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:- த.இரவீந்திரராஜா (மகன்), பிள்ளைகள்.

(29466)(40-11-12-36)

---

### கண்ணீர் அஞ்சலி

*எமது வலய ஆசிரிய ஆலோசகர் திரு. இ.சர்வேஸ்வரன் அவர்களின் தந்தையார்*

**ந.இரத்தினம்**

அவர்களது மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-33968)(37-11-12-36)

வலய நலன்புரிச்சங்கம், தென்மராட்சி கல்வி வலயம்.

---

### மரண அறிவித்தல்கள்

**S.R.அந்தோனிப்பிள்ளை**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட S.R. அந்தோனிப்பிள்ளை (கச்சேரி) அவர்கள் 07.03.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை செல்லம் அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனியாப்பிள்ளையின் அன்புக் கணவரும் பற்றிக் இம்மனுவேல், பிறேமா ஆகியோரின் அன்புத் தந்தையும் மரியமலர், சகாயராசா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை 3.00 மணியளவில் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை.* (29464)(31-11-12-36)

தகவல்: திரு. திருமதி அன்ரனி சகாயராசா (மருமகன்).

**திருமதி வரதலெட்சுமி தணிகாசலம் (லெச்சு)**

**நயினாதீவு 5ஆம் வட்டாரம்**

நயினாதீவைப் பிறப்பிடமாவும் இல. 70, பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலெட்சுமி தணிகாசலம் அவர்கள் நேற்று (08.03.2004) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணசிங்கம் - கதிராசிப்பிள்ளையின் புதல்வியும் தணிகாசலத்தின் அன்பு மனைவியும் சுதர்சினி, சுதர்சன், சுகிர்தன், சுதாகரன், சுஜிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தம்பு சிவக்கொழுந்தின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், சந்தானலெட்சுமி, தனலெட்சுமி, யோகரெத்தினம், பரமேஸ்வரன், இராசலெட்சுமி, லலிதாம்பாள், காலஞ்சென்ற நல்லையா, மனோன்மணி, சரவணபவன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கோபாலப்பிள்ளை, உருக்குமணி, காலஞ்சென்ற சண்முகரெத்தினம், சோமசுந்தரம் கனகரெத்தினம், பாலசுப்பிரமணியம், இராசம்மா, புவனேஸ்வரி, சுகந்தி, கதிரமலைநாதன், பரமானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கோகிலாம்பாள், காலஞ்சென்ற கனகசபை, பரமேஸ்வரி, சிவபாக்கியம், தர்மலிங்கம், தருமதேவி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை இல. 70, பலாலி றோட், திருநெல்வேலியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.70, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.* (29464)(31-36-11-12)

தகவல்: த.தணிகாசலம் (கணவர்).

**அருட்சகோதரி**

**மேரி லெற்றீசியா வயித்தியாம்பிள்ளை (திகு)**

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும், இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் வசித்து வந்தவருமான அருட்சகோதரி மேரி லெற்றீசியா வயித்தியாம் பிள்ளை 07.03.2004 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு இளவாலை தி.கு.கன்னியர் மட ஆலயத்தில் இரங்கற்திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருக்குடும்ப மாகாண இல்லம்,*
*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (29465)(36-11-12)

தகவல்: அருட்சகோ. அன்சில்லா ஜேம்ஸ் (யாழ்.திகு.மாகாண முதல்வர்).

**திருமதி சிவபர்க்கியம் கார்த்திகேசு**



புங்குடுதீவு 11 ஆம் வட்டராத்தைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் கார்த்திகேசு அவர்கள் 2004.03.08 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மாகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஏரம்பமூர்த்தி - வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற வர்களான நாகனாதி - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தியின் (முன்னாள் துறைமுக அதிகாரசபை இலிகிதர்) அருமைச் சகோதரியும் பிறேமலதா (ஆஸ்திரேலியா), பரமேஸ்வரன் (சங்கீத பூஷணம், ஆசிரியர், யாழ். கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்), காலஞ்சென்ற பிறேம்குமார் (யாழ். மாநாகரசபை முன்னாள் எழுதுவினைஞர்), ஸ்ரீலதா (ஆசிரியை, கொட்டாஞ்சேனை, முஸ்லிம் வித்தியாலயம்-கொழும்பு -13) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் - வவுனியா - ஆஸ்திரேலியா), விஜயகுலராணி (ஆசிரியை - யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்), சுசீலா (ஆசிரியை - யாழ். மத்திய கல்லூரி), சிவஞானசுந்தரம் (கல்விவள ஆசிரிய ஆலோசகர், மேல் மாகாணம்) ஆகியோரின் அருமை மாமியாரும் அனுராஜ் (அமெரிக்கா), திருமதி அனுஜா விவேகானந்தன் (ஆஸ்திரேலியா), தனுராஜ் (விளையாட்டு உத்தியோகத்தர்- வவுனியா), சைந்தவி, பிறேம்ஜி, பகிராஜ், பிறேமினா, ஜனகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை மட்டுவில் கிழக்கில் உள்ள அவரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று, புதவுடல் பிற்பகல் 3 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*பொற்கொல்லர் வீதி,*
*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி,*
*தொலைபேசி: 077 6016299* (29454)(36-11-12)

தகவல்: கார்த்திகேசு (கணவர்).

# நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பலர் சொத்துப் பிரகடனம் சமர்ப்பிக்கவில்லை!

கொழும்பு,மார்ச்9

கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அரச மற்றும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தமது சொத்துக்கள் பற்றிய பிரகடனத்தைச் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் காலத்துக்குக்காலம் நிறைவேற்றப்பட்ட சொத்துக்கள் பிரகடனச் சட்டங்களுக்கமைய தமது சொத்துக்கள் பற்றிய பிரகடனத்தைச் சமர்ப்பிக்க கடப்பாடு கொண்டுள்ளனர். ஒருவர் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்யும் வேளையிலோ அல்லது அதிலிருந்து இரண்டு மாத காலத்துளோ தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர் தனது பதவியை ஏற்கும் வேளையிலோ தேர்தல் ஆணையாளருக்குத் தமது சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தை சமர்ப்பித்தல் வேண்டும் அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய அதிகாரியிடம் தமது சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தை அவர் சமர்ப்பித்து வருதல் வேண்டும்.

இந்த வகையில் சபாநாயகர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் ஜனாதிபதியிடமும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடமும், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களச் செயலாளரிடமும் தத்தமது சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்விதம் சமர்ப்பிக்கத் தவறுதல் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகக் கொள்ளப்படும்.

கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் தமது சொத்துக்கள் பற்றிய பிரகடனத்தைச் சமர்ப்பிக்கத் தவறிய உறுப்பினர்களில் தற்போது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு உட்பட்டுள்ள அமைச்சர்களும் அடங்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

இதனிடையே எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல்வாதிகள் தமது வேட்புமனுவுடன். சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தையும் சமர்ப்பித்துள்ளனரா என்பது குறித்துத் தேர்தல் ஆணையகமும் பூரண விவரங்களை வெளியிடவில்லை என்று, கூறப்படுகிறது.

சிற்சில மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு அவர்களது சொத்துக்கள் பிரகடனப்படுத்தப்படுவதன் அவசியம் பற்றி விளக்கிக் கூறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்ட முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் கே.எம்.எம்.பி.குலதுங்க, நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படவேண்டுமானால், சொத்துப் பிரகடனத்தை சமர்ப்பிக்காத உறுப்பினர்களக்கெதிராக விரைவாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமெனக் கருத்து வெளியிட்டார்.

இவ்விதம் தமது சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ள எந்தவொரு நபரதும் சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தைப் பார்வையிடுவதற்கான உரிமை நாட்டின் சகல பொது மக்களுக்கும் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## ஆதரவாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக அருகருகே நின்று பிரசாரத்தில் ஈடுபட்டனர் என்றும் -

அப்போது, ஈ.பி.டி.பி வாகனத்துக்கு பாதுகாப்பளிக்க வந்திருந்த பொலீஸார் கூட்டமைப்பினரின் பிரசார ஓட்டோவை அணுகி, ஒலிபெருக்கிக்கான அனுமதிப்பத்திரம் உண்டா என்று கேட்டனர் என்றும் -

ஒலிபெருக்கி அனுமதிப்பத்திரம் காண்பிக்கப்படாததையடுத்து, ஓட்டோவில் இருந்தவரான எஸ்.சதாசிவம் (வயது46) என்பவரைப் பொலீஸார் கைதுசெய்து சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர் என்றும் - கூறப்படுகிறது.

இதுகுறித்து ந.ரவிராஜுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார். கைதுசெய்யப்பட்ட நபரைப் பொலீஸார் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோரி வீதிமறியலிலும் அவர் ஈடுபட்டார். அவரது ஆதரவாளர்களும் அவருடன் மறியலில் கலந்து கொண்டனர்.

இதனால் அப்பகுதியில் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது. இதனையடுத்து, கைது செய்த நபரை அந்த இடத்திற்கு மீண்டும் அழைத்து வந்து பொலீஸார் விடுவித்தனர்.

இதன்பின்னர் வீதி மறியல் கைவிடப்பட்டு போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (ஒ-9-10-31-117)

## எவரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும் தெரிவிக்கையில், "நிலைமையைப் பயன்படுத்தி சுய இலாபம் தேடுவோர் இவ்வாறு தவறான வதந்திகளைப் பரப்புகிறார்கள் என்றும் அவர்களுக்கெதிராக தாம் கடும் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் கூறினார்.

வன்னி, யாழ்ப்பாணம் என்ற பிரதேச வாதத்தைத் தாம் ஒருபோதும் முன்னெடுக்கப்போவதில்லை எனவும், அதனால் அந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அஞ்சத் தேவையில்லை எனவும் கேணல் கருணாவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இரண்டு பேருந்துகளில் மட்டக்களப்பிலிருந்து யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் உள்ளிட்ட முக்கியமானவர்கள் பலர் புறப்பட்டுச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஆயர் குழுவுடனான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யோடும் முழுவதையும் எடுத்துக்கூறினார்கள்.

கருணாவின் அடியாளகள் மட்டக்களப்பு, அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்ளை அங்கிருந்து வெளியேறும்படி அச்சுறுத்தியிருப்பதையும் பல வர்த்தகர்களை கடைகளை மூடிவிட்டு வெளியேறும்படி மிரட்டியிருப்பதையும் விளக்கி தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்ற துன்பகரமான நிலைமைகளை எடுத்துச்சொன்னார்கள்.

இரு தரப்பினரையும் ஓர் இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும். சுமுகமான நிலை ஏற்பட வேண்டும், என்ற கோரிக்கைகளுடன் வந்த அந்தக்குழுவினர் இங்கிருந்து மட்டு, அம்பாறை தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் நிலைமைகளைத் தெளிவாக்கியவுடன் தாம் கொண்டுவந்த கோரிக்கைகளை மாற்றிக்கொண்டனர். அவர்கள் அங்கு எந்தச்செய்திகளையும் சரியாக - தெளிவாக அறிய முடியாதநிலையில் இருந்தனர். இங்கு எல்லா விடயங்களையும் தெளிவாக விளக்கிய பின்னர் குறிப்பாக கடந்த ஒரு சில நாள்களின் முன்னர் வந்த கரிகாலன் மற்றும் சில தளபதிகளும் நிலைமையைத் தெளிவாக எடுத்துச் சொன்ன காரணத்தினால் - இப்போது தெளிவாக நிலைமையைப் புரிந்திருக்கின்றார்கள்.

அங்கே கருணா என்ற தனி மனிதா பொய் வதந்திகளைக் கிளப்பிவிட்டு - உணர்ச்சிகளைக் கிளப்பி - பிரதேச வாத உணர்வுகளை ஊட்டி - சில அசம்பாவிதங்களை, செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றார். அதை மக்கள் தொடர்ச்சியாக அனுமதிக்கப் போவதில்லை. விரைவில் எமது தலைமைத்துவத்தால் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புக்களை எமது தளபதிகள் அங்கு செயற்படுத்துவார்கள். விரைவில் நாம் சகலதையும் எமது கட்டுபபாட்டுக்குள் கொண்டு வருவோம் என்ற நம்பிக்கையை அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். எவ்வித வன்முறையும் இன்றி இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற முழு நம்பிக்கை இருககின்றது!

அங்குள்ள போராளிகள் எங்களது தேசியத் தலைவரை - எமது போராட்டத்தை - தமிழினத்தினுடைய போராட்டத்தை - உறுதிப்படுத்திக் கொண்டு அந்த விசுவாசத்தில் வந்தவர்கள் தனிப்பட்ட கருணாவை விசுவாசித்து வரவில்லை.

அதில் நாமும் அவர்களும் தெளிவாக இருக்கின்றோம். தங்களை வழி நடத்திய அத்தனை தளபதிகளையும், பொறுப்பாளர்களையும் அவர்கள் எங்களது தேசியத் தலைவரிடம் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அங்குள்ள போராளிகள் மிகத் தெளிவோடும் உறுதியாகவும் இருக்கின்றார்கள். இறுதியாகக் கருணாவின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து இங்கு வந்த தளபதிகளும் போராளிகளும் இதேவிடயத்தை எடுத்துச் சொன்னார்கள்.

இப்போது 90 வீதமான போராளிகளிடம் ஆயுதங்களை அவர் களைந்து வைத்துள்ளார். அங்குள்ள போராளிகள் தனது கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்ற பயப்பீதி காரணமாக அவர் அப்படியான ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளார்.

எனவே, நிச்சயமாக நாம் அங்குள்ள நிலைமையை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்.

கருணாவைக் கொலை செய்வதற்கு ஒரு குழு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் கூறியிருப்பது அர்த்த மற்றது. அவர் இப்போது பீதியடைந்திருக்கின்றார். அங்கு தாம் செய்த குற்றச் செயல்கள், அத்துமீறல்கள் காரணமாகவும் தளபதிகள், போராளிகள் மத்தியில் தமக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புக் காரணமாக அவர் தமக்குள்ளேயே பயப்பீதி அடைந்திருக்கின்றார். அந்தப் பீதி காரணமாக - பயம் காரணமாக - தற்போது தன்னைக் கொல்ல கொலையாளிகளை அனுப்பியுள்ளார்கள் எனவும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன எனவும் கதைகளை - வதந்திகளை - அவர் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்.

உண்மையிலேயே அங்குள்ள போராளிகள், தளபதிகள்தான் அவர் மீது நம்பிக்கையிழந்து இருக்கின்றார்கள். எனவே, இங்கிருந்து எவரும் போக வேண்டிய அவசியமில்லை. எமது தலைமை அப்படியான ஒரு முடிவை எடுக்கப் போவதும் இல்லை. (ஒ-க-9)

# தமிழ்நாட்டில் 'பொடா' சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது!

### இந்திய உயர் நீதிமன்றம் கண்டனம்

சென்னை,மார்ச்9

தமிழகத்தில் 'பொடா' சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு இந்திய உயர் நீதிமன்றம் தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

'பொடா' மறு ஆய்வுக் குழுவின் அதிகாரத்தை எதிர்த்து தமிழக அரசு இந்திய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 3 மனுக்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியபோதே உயர் நீதிமன்றம் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. அத்துடன், தமிழக அரசின் ஆட்சேபனை மனுக்களையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதனையடுத்து வைக்கோ, நக்கீரன் கோபால் உள்ளிட்டோர் மீது தமிழக அரசு 'பொடா' சட்டத்தின்கீழ் தொடர்ந்துள்ள வழக்குகள் பலமிழந்துள்ளன என்று சட்டவல்லுநர்கள் கூறுகின்றனர். நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியதாவது:-

தனிநபருக்கு எதிராகப் 'பொடா' சட்டம் பயன்படுத்தப்படும்போது, அதற்கு பூர்வாங்க அடிப்படை இருக்கிறதா என்பதை ஆய்வுசெய்ய வேண்டிய கடமை 'பொடா' மறு ஆய்வுக் குழுவுக்கு இருக்கிறது.

'பொடா' சட்டம் அளித்துள்ள அதிகாரங்கள், தமிழகத்தில் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. உயர் நீதிமன்றம் ஏற்கனவே, அளித்துள்ள 3 தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, சென்னை மேல் நீதிமன்றம் பெப்ரவரி 4ஆம் திகதி தமிழக அரசின் மனுவைத் தள்ளுபடி செய்தது சரியானதே என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ஒ)

## கிழக்கில் மக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாதவர்களாகவும் மக்கள் திண்டாடுகின்றனர்.

தேர்தலில் கவனம் செலுத்துவதை விடுத்து நிகழ்கால விடயத்தை அறிவதில் பலரும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

நேற்று (திங்கள்) அம்பாறைக் கச்சேரியில், தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சை அணிகளின் தலைமை வேட்பாளர்களுக்கான சட்டதிட்ட பாதுகாப்புத் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. அரச அதிபர் ஹேரத் அபேதீர, உதவி தேர்தல் ஆணையாளர் தென்னக்கோன் ஆகியோர் கூட்டத்தை நடத்தினர்.

தமிழரசுக் கட்சி தலைமை வேட்பாளர் அ.சந்திரநேரு கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கல்முனையில்

கல்முனையிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் புலிக்கொடி பறக்கவிடப்பட்டிருப்பதுடன் வாயில் முன்பாக கறுப்புக் கொடி ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. நேற்று திங்கட்கிழமை கல்முனைப்பிரதேசத்தில் அரச அலுவலகங்கள், வங்கிகள் எதுவும் இயங்கவில்லை. மாணவர்கள் வராததால் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

தமிழ் வர்த்தகர்களின் கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன.

"வடக்கின் தலைவர் பிரபாகரன் சிந்திக்க சில விடயங்கள், ஞாபகம் இருக்கட்டும் வடபிராந்தியத் தலைவரே" என்ற தலைப்பிட்டு ஒரு துண்டுப்பிரசுரம் மக்களிடையே விநியோகம் செய்யப்பட்டது. இப்பிரசுரத்தை மட்டு - அம்பாறை பொதுமக்கள் வெளியிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிழக்கிற்குத் துரோகம் செய்யப்பட்டு விட்டது என்று குற்றஞ்சாட்டுவதாகவும், கருணாவுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் துண்டுப்பிசுரம் அமைந்திருந்தது.

### மட்டக்களப்பில்

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கிழக்கு மாகாண புலிகளின தளபதி கேணல் கருணா நீக்கப்பட்டதையடுத்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், பொதுச் சந்தைகள் என்பன மூடப்பட்டிருந்தன. முஸ்லிம் பிரதேசங்களில் கடைகள் திறந்திருந்த போதிலும் ஹர்த்தால் தொடர்பான அறிவித்தல்கள் கிடைத்திருந்தால் அதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கியிருக்கலாமென முஸ்லிம்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்புக்கும், கொழும்பிற்கும் இடையிலான தூர இடப்போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

சில இடங்களில் கேணல் கருணா அம்மானுக்கு ஆதரவான ஊர்வலங்களும் நடைபெற்றன.

பரபரப்பான சூழ்நிலையே தொடர்ந்தும் காணப்படுகிறது.

இதேவேளை, மட்டக்களப்பு கல்விக் கல்லூரியில் பயிற்சி பெறும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் வெளியேறிச்சென்றிருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது போன்று மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில் பயிற்சி பெறும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் கல்லூரியை விட்டு வெளியேறியிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)


பொருளியல் கருத்தரங்கு
பகுதி II நாளை
காலை 9-4 மணிவரை
K.உதயன்
★பகுதி II இற்கு புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
★பகுதி I இற்கு கருத்தரங்கு மீண்டும் நடைபெறமாட்டாது.
விக்னா
கல்வி நிறுவனம்
(40)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
பொருளியல்
2004 A/L, DAY
இறுதிக் கருத்தரங்கு
K.உதயன்
காலம்:
11.03.2004 வியாழன்
12.03.2004 வெள்ளி
நேரம்:
காலை 8.30 மணி -
சனி மாலை 5 மணிவரை.
(29238)(31) - நிர்வாகி.

BIT Bachelor of Information Technology
University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமாணி பட்டக்கல்விக்கான,
கல்வியாண்டு 2004/2005 இற்குரிய
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி: 20.04.2004
IIS தலைமையகத்தில் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள்
கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும்
IIS நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.
"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
INSTITUTE OF INFORMATICS STUDIES
No. 100, Clock Tower Road, Jaffna.
Tel: 21 222 2831.
(சி-33953)(11-12-31)

நீங்களும் ஒரு கணக்கியல் வல்லுநராகிட அரியதோர் வாய்ப்பு
aat - stage 1.11 & 111 June, December - 2004
பரீட்சைக்கான விரிவுரைகள் கட்டணம்
முற்றிலும் இலவசம்
100% Free
இவ்வாய்ப்பு 15.03.2004 வரை மட்டுமே!
வெளிமாவட்ட மாணவர்களுக்கு மட்டும் இவ்வாய்ப்பு 21/03/2004 வரை வழங்கப்படும்
★ இரு மொழிகளிலும் விரிவுரைகள் (தமிழ்/ஆங்கிலம்)
★ க.பொ.த. (உ/தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மட்டுமே இச்சலுகை.
★ பதிவினை மேற்கொள்ள தேசிய அடையாள அட்டை, கல்விச்சான்றிதழ் (மூலப்பிரதி, photocopy)
என்பவற்றுடன் வருகை தரவும்.
IPAS
199, main Street Jaffna
T.P: 0777-563292/563294 (அலுவலக நேரம் தினமும் காலை 9.00 - 12.30 வரை)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.